பக்கங்கள்: 20 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 03, திங்கட்கிழமை 16.01.2017 | கதிர் 72

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.

WELLA Hair Dressing

வெலா சலூன்

Ladies & Gents

இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

### சர்வஜன வாக்கெடுப்பு மூலம்

# மக்களின் இணக்கத்துடனேயே புதிய அரசமைப்பு வரவேண்டும்

## பின் கதவால் கொண்டுவரும் திட்டத்தை ஏற்க முடியாது என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜனவரி 16

**"புதிய அரசமைப்பு எதுவும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாட்டு மக்களின் அங்கீகாரத்துடன் தான் கொண்டு வரப்பட வேண்டும். மக்களுக்குப் பின்புறமாக எதுவும் முன்னெடுக்கப்படக் கூடாது. அதுவே, அரசமைப்புச் சபையின் தீர்மானத்தின் சாரமும் கூட."**

**- இவ்வாறு உறுதிபடக் கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிசெய்யும் எந்த அரசமைப்புத் திருத்தத்தையும் ஆதரிப்பதில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருப்பதாக வெளியான செய்திகள் குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

உத்தேச அரசமைப்பு மாற்றத்தின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கக் கூடாது என்ற வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்

பக்கம் 20 »

## முன்னாள் போராளி கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஜன.16

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் வைத்து முன்னாள் போராளியொருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

திருவையாற்றைச் சேர்ந்த முருகையா தவவேந்தன் என்ற - புனர்வாழ்வு பெற்ற - முன்னாள் போராளியொருவரே இவ்வாறு நேற்று இரவு 11 மணியள

பக்கம் 19 »

## அடுத்த மாதத்துடன் நீர் மின்சாரம் 'அவுட்'

கொழும்பு, ஜன.16

கடந்த 40 வருடத்தில் மிக மோசமான வறட்சியை இலங்கை எதிர்கொண்டுள்ள நிலையில் நீர் மின்சார உற்பத்தி அடுத்த மாதம் வரையே - பெப்ரவரி வரையே - தாக்குப் பிடிக்கும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


பிரதான நீர்த்தேக்கங்கள், ஆக 27 வீதக் கொள்ளளவுக்கே தற்போது நீரைக் கொண்டுள்ளன. சிறிய நீர்த்தேக்கங்களிலும் 30 வீதத்துக்குக் குறைவாகவே நீர் உள்ளது.

இந்த நீரை விவசாயத்துக்கும் மக்கள் பாவனைக்கும் கூட வழங்க வேண்டியுள்ளதால், அதனை முழு அளவில் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாது என்றும் கூறப்படுகின்றது.

நீர்த்தேக்கங்கள் மூலமான நீர் மின்சார உற்பத்தி தடைப்படுமானால் நாடு அனல் மின்சா

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



'செட்டி நட்டம் ஊர் மேல...!
அரிசி நட்டம் அரசு மேல...!!'

## எட்டுச் செலவுக்குச் சென்றவர்கள் மீது கட்டுவனில் வைத்துக் கடும் தாக்குதல்

### இளம் யுவதி உட்பட ஏழு பேர் காயம்

ஏழாலை ஜன.16

எட்டுச் செலவுக் கிரியைகள் செய்யச் சென்ற ஏழாலை வாசிகள் மீது கட்டுவனைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டி ஒன்று நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் இளம் யுவதி உட்பட ஏழு பேர் காயமடைந்தனர். இவர்களில் சிலர் படுகாயமடைந்தனர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இளைஞர் கோஷ்டியினர் வாள்கள், கத்திகள், பொல்லுகள் மற்றும் கூரிய ஆயுதங்களால் தங்களைத் தாக்கினர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது அங்கு சென்ற அப்பகுதி (ஜே /204) கிராம சேவையாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது

பக்கம் 19 »

## அரிசி இறக்குமதியில் ரூ.1,500 கோடி நஷ்டம்

கொழும்பு, ஜன.16

2014 - 15 ஆண்டுகளில் 2 லட்சத்து 57 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதில் ஏற்பட்ட தவறான நடைமுறைகள், அரசின் மோசமான கேள்விப்பத்திரச் செயன்முறைகள்

பக்கம் 19 »


## கண்டியில் 12 நோயாளர்களுக்கு உயிர்கொல்லி வைரஸ் தொற்று!

### அனைத்து ஆஸ்பத்திரிகளும் உஷார் நிலையில்

கண்டி, ஜன.16

உயிர்கொல்லி இன்புளுவென்ஸா காய்ச்சலைப் பரப்பும் 'ஏ.எச்1என்1' வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக முழு உஷார் நிலையில் இருக்கும் படி நாடு முழுவதிலும் உள்ள

பக்கம் 19 »



### பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதில் ஒரு சொல் கூட மாற்ற முடியாது

## 13 இற்கு அப்பால் சென்று பேச இது தருணமல்ல என்கிறது சு.க.!

### உப சபாநாயகர் திலங்க சுமதிபால கூறுகிறார்

கண்டி, ஜன. 15

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் கதைப்பதற்கு தற்போதைய சூழல் உகந்ததல்ல என சிறி லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கண்டிக்குச் சென்றுள்ள பிரதி சபாநாயகரும் குழுக்களின் தலைவருமான திலங்க சுமதி

பக்கம் 19 »



## தீர்வு இல்லாத அரசமைப்பை உருவாக்க கூட்டமைப்பு உதவாது என்கிறார் சித்தர்

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் யோசனையை அரசு கைவிடுமேயானால் அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேறகாது, அதிலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவர் இவ்

பக்கம் 19 »

# அரசுக்கு எதிரான பெரும் கூட்டமைப்பு உருவாக்க மும்முரமாக நடவடிக்கை

அரசுக்கு எதிரான தேசிய எதிர் அமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான பேச்சு ஒன்று முன்னணி பிக்குகள், தேசிய அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோரிடையே இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பதிவுசெய்யப்பட்ட கட்சி ஒன்றின் தலைவர் ஒருவரின் வீட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. அம்பாந்தோட்டையில் பிக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தப் பேச்சில் ஆராயப்பட்டுள்ளது.

அரச எதிர்ப்பு, பிரிவினைவாத அரசமைப்பு, 'எட்கா' உடன்படிக்கை, அரச சொத்துக்களின் விற்பனை, வங்குரோத்துப் பொருளாதாரம், தேர்தலைப் பிற்போடுதல், மத்திய வங்கி முறி மோசடி, மார்ச்சில் இடம்பெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாட்டில் இராணுவத்தை கலந்துகொள்ளச் செய்தல் போன்ற விடயங்களை முன்வைத்து இந்த எதிர் அமைப்பு உருவாக்கப்படுவதற்கு இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த எதிர் அமைப்பின் ஏற்பாட்டாளராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸும், தேசிய ஒருங்கிணைப்பாளராக ரியல் அட்மிரல் சரத் வீரசேகரவும், அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளராக முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த எதிர் அமைப்பு ஜனவரி இறுதியில் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது எனவும் இதற்கென நுகேகொட நகரில் பாரிய கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது எனவும் அவ்வமைப்பு தீர்மானித்துள்ளது.

## நுவரெலியாவில் தேசியப் பொங்கல்





மத்திய மாகாணத்தின் தேசிய தைப்பொங்கல் விழா நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அமைச்சர்கள் டி.எம்.சுவாமிநாதன், மனோ கணேசன், பழனி திகாம்பரம், இராதகிருஷ்ணன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## 20ஆம் திகதியுடன் காலநிலை மாறும்?

நாட்டில் நிலவி வரும் வறட்சியுடன் கூடிய குளிரான காலநிலை எதிர்வரும் 20 ஆம் திகதி மாற்றமடையலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதியின் பின்னர் நாட்டின் பல பாகங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படலாம் எனவும் திணைக்களம் விடுத்துள்ள அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

## வவுனியா திரையரங்கில் நேற்று இளைஞர் குழுக்கள் குழப்பம்!

*பொலிஸாரின் தலையீட்டால் நிலைமை கட்டுக்குள்*

வவுனியாவில் உள்ள திரையரங்கு ஒன்றில் நேற்று மாலை 5 மணிக்கு திரையிடப்பட்ட 'பைரவா' திரைப்படத்தைப் பார்வையிடச் சென்ற இளைஞர்களுக்கு இடையே குழப்ப நிலை ஏற்பட்டதால் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் கூச்சலிட்டனர் என்றும் இதனால் மற்றொரு இளைஞர் குழுவுக்கும் இவர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் தமிழ் மொழி மூல தொலைபேசி முறைப்பாட்டுப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. உடனடியாகத் திரையரங்கிற்கு விரைந்த பொலிஸார் அங்கு ஏற்பட்ட குழப்ப நிலையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இதையடுத்து தொடர்ந்து திரைப்படக் காட்சி இடம்பெற்றது. (ம-81)

## மாணவருக்கு நன்மை செய்த அதிபர் பணத்தையும் பதவியையும் இழந்தார்

*18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனுடன் நிர்க்கதி*

கிளிநொச்சி, ஜன.16

மாணவர்கள் சிறப்பான சூழலில் கல்வி கற்பதற்காக பாடசாலையில் கட்டடம் ஒன்றை அமைத்த அதிபர் ஒருவர் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் அதிபர் பதவியையும் இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட உமையாள்புரம் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

"பாடசாலைக் கட்டடத்தைக் கட்டுங்கள், உரிய நிதியைப் பெற்றுத் தருவோம் என்று அதிபருக்கு வாக்குறுதி வழங்கிய அதிகாரிகள் இன்று உயர் பதவிகளுக்குச் சென்றுள்ள போதிலும் அதிபருக்கான பணத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்று தெரியவருகின்றது.

உமையாள்புரம் பாடசாலையில் மாணவர்களுக்கு அரை நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக கடந்த 2011 ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனம் 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தது. 80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட அரை நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்கவே அந்த நிதி வழங்கப்பட்டது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 2011 ஆம் ஆண்டு பாடசாலையில் இடம்பெற்ற போது அப்போது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்தவரும் இப்போது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரான த.குருகுலராஜா மற்றும் அப்போது கண்டாவளைப் பிரதேச செயலாளராக இருந்தவரும் தற்போது வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் செயலாளராக இருப்பவருமான எஸ்.சத்தியசீலன் ஆகியோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வுக்குச் சென்ற த.குருகுலராஜா, இந்தப் பிரதேசம் கடும் வெப்பம் கொண்டது, தகரம் கொண்ட கூரையுடன் அமைக்கப்படவுள்ள வகுப்பறைக் கட்டடம் மாணவர்களுக்கு பொருத்தமானதாக இருக்காது, எனவே, ஓட்டுக்கூரையுடன் நிரந்தரக் கட்டடமாக அமையுங்கள் எனவும் அதற்கான நிதியைத் தான் பெற்றுத்தருவார் எனவும் பாடசாலை அதிபர் செ.அருளானந்தசிவத்திடம் வாய்மூலம் உறுதியளித்தார் எனக் கூறப்படுகின்றது. அவர் இவ்வாறு கூறியபோது, அப்போதைய பிரதேச செயலாளர் சத்தியசீலனும் உடனிருந்தார்.

அந்த வாய்மூல உறுதிமொழியை நம்பிய பாடசாலை அதிபர், நூறு அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட நிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைத்து 2012 ஆம் ஆண்டு த.குருகுலராஜாவைக் கொண்டு சம்பிரதாயபூர்வமாகத் திறப்பு விழாவும் செய்திருந்தார்.

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்காக யுனிசெவ் நிறுவனத்தின் பணத்திற்கு மேலதிகமாக அதிபர் தனது பெயரில் மக்கள் வங்கியில் ஐந்து லட்சம் ரூபா கடன் பெற்றார். தனது குடும்பத்தாரின் நகைகளை அடகு வைத்து ஏழு இலட்சம் ரூபா, இரண்டு ஆசிரியைகளிடம் வட்டிக்குதலா மூன்று இலட்சம் ரூபாவுமாகப் பெற்றதுடன் மிகுதிப் பணத்தை ஏனைய வழிகளிலும் பெற்று சுமார் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலவுசெய்தார் என்று கூறப்படுகின்றது.

திறப்பு விழாவின் போது அதிபர் இந்த விடயத்தை த.குருகுலராஜாவின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளார். ஆனால் அவர் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுப்பெற்று இன்று வடமாகாண கல்வி அமைச்சராகவும் பதவியேற்றிருக்கின்றார். எனினும் அவர் வாக்குறுதி அளித்தவாறு இது வரை பாடசாலைக்குப் பணத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

மேற்படி உமையாள்புரம் பாடசாலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2016 வரை கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றிய செ.அருளானந்தசிவம் தற்போது அதிபர் பதவியையும் இழந்து பரந்தன் ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

நிரந்த வகுப்பறைக் கட்டடத்துக்காக அவர் வங்கியில் பெற்ற கடன் சம்பளத்தில் கழிக்கப்படுகின்றது. இரண்டு ஆசிரியைகளிடம் பெற்ற கடனில் ஓர் ஆசிரியைக்கு உரிய பணத்தை வட்டியுடன் திருப்பிகொடுத்துள்ள நிலையில், மற்றைய ஆசிரியையின் பணத்தையும் விரைவில் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அந்தச் சம்பவம் உண்மையானது என்றும் தற்போது உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் மாகாணக் கல்வி அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் அந்த அதிபரினால் கடிதங்கள் அனுப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (ம-70)

## திருநகர் பாரதி சனசமூக நிலைய புனரமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.திருநகர் பாரதி சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பாரதி சிறுவர் பூங்கா மைதானத்தில் நிலைய தலைவர் அடைக்கலம் எட்லி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மரியன்னை தேவாலயப் பங்குத்தந்தை நேசராஜா அடிகளார் கலந்துகொள்வார்.

மேற்படிக் கட்டடப் புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து மூன்று லட்சம் ரூபாவை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-21)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

*மற்றொருவர் படுகாயம், மட்டுவிலில் சம்பவம்*

சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்குச் சமீபமாக நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செ.சுரேஷ் (வயது 25) என்ற இளைஞர் மரணமடைந்தார். அதே இடத்தைச் சேர்ந்த ச.டேவிட் (வயது 24) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர்கள் பயணித் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரமாக, வளைவில் இருந்த சமிக்ஞை கம்பத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. நேற்று ஞாயிற்றுக் கிழமை மதியம் 2.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில், வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். வழியில் ஒருவர் உயிரிழந்தார்.

மற்றையவருக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்டு, உடனடியாகவே மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-21-23)


## நவீல்ட் பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனங்கள்

கைதடி நவீல்ட் விழிப்புலன் அற்றோர் பாடசாலைக்கு 'மிளிர்வுக்குக் கைகொடுப்போம்' அமைப்பினர் ஒரு தொகுதி ஒலிபெருக்கி சாதனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில், மேற்படி அமைப்பினர் நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியதுடன் தாமும் அதில் பங்கேற்று மாணவர்களை மகிழ்வித்து உற்சாகமூட்டினர். (ம-21)

# ஓமந்தை சாவடியில் இருந்து வெளியேறியது இராணுவம்





வவுனியா,ஜன.16

வவுனியா, ஓமந்தை சோதனைச் சாவடியில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை முதல் இராணுவத்தினர் வெளியேறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் தற்போது முற்றாக வெளியேறியுள்ளனர்.

கடந்த யுத்த காலத்தில் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வடக்கில் இருந்து தெற்குக்கும், தெற்கில் இருந்து வடக்குக்குமான நுழைவாயிலாகவும் மக்களையும் பொருள்களையும் சோதனையிடும் பிரதான சோதனைச் சாவடியாகவும் இது இருந்தது.

இந்தப் பகுதி 21 பேருக்குச் சொந்தமான 24 ஏக்கர் காணியை உள்ளடக்கியிருந்தது.

இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை மீள ஒப்படைக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனையடுத்துத் தற்போது இராணுவம் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

புதிய அரசு அமைக்கப்பட்ட போது, இந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் இராணுவம் அந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்தது. தற்போது இராணுவம் தமது தேவைக்காக அமைத்திருந்த கட்டடங்களை அகற்றி வெளியேறியுள்ளது.

இந்த நிலையில் குறித்த காணியின் உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். ஒரு சில தினங்களில் இந்தக் காணிகளை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அண்மையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இந்தப் பகுதிக் காணி உரிமையாளர்களுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் ஆகியோருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்தப் பகுதியில் இருந்து முழுமையாக இராணுவம் வெளியேறி பொதுமக்களின் காணியை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டிருந்தது.

பதிலீடாக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைய ஏ-9 வீதியில் புளியங்குளம் பகுதியில் மாற்றுக் காணி வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## 15 நாள்களில் மட்டும் 1,311 டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜன.16

2017 ஆம் ஆண்டு ஆரம்பமானது முதல் தற்போது வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் ஆயிரத்து 311 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலைச் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்த டெங்கு நோயாளர்களுள் 35.39 வீதமானோர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நுளம்புகள் பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தொற்று நோய்ப் பிரிவு, பொது மக்களுக்கு மீண்டும் அறிவித்தல் விடுத்துள்ளது.

அத்துடன், மூன்று நாள்களுக்கும் அதிகமாகக் காய்ச்சல் காணப்பட்டால், உடனடியாக வைத்தியரை நாடுமாறும் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)



## விகாரைகளுக்கும் இராணுவ பாதுகாப்பு

கொழும்பு, ஜன.16

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து விகாரைகளுக்கும் இராணுவப் பாதுகாப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சால் கடந்த வாரம் இது தொடர்பிலான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வீதிகளுக்கு அருகாமையில் மற்றும் ஏனைய இடங்களில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளுக்கும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் திருகோணமலை பிரதேசத்தில் புத்தர் சிலைகள் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டிருந்தன.

அதைத் தொடர்ந்து புத்தர் சிலைகளுக்கும் விகாரைகளுக்கும் இராணுவப் பாதுகாப்பு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து ஏற்கனவே புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மழை வேண்டி குடைபிடித்து இரணைமடுவில் வழிபாடு!





கிளிநொச்சி, ஜன.16

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மழைவேண்டி விவசாயிகளால் குடைபிடித்து விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நிலவிவரும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

இந்த நிலையில் மழைவேண்டி கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இரணைமடுக் குளத்திலிருந்து குடை பிடித்தவாறு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றடைந்து அங்கு பொங்கலிட்டு வழிபாடுகள் செய்தனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி சுதாகரன், கமக்கார அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சிவமோகன், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-70)

## நாளை கையளிக்கப்படவுள்ள எல்லை நிர்ணய அறிக்கை

### மே மாதம் உள்ளூராட்சித் தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் நடத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதற்குஏற்றவகையில் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை நாளை 17 ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதன் பின்னர், எதிர்வரும் 20 ஆம் திகதி அது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டால், மே மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்தலாம் என்று தேசப்பிரிய கூறியுள்ளார். இந்தத் தேர்தலை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின் பின்னரே நடத்தலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - உள்ளூராட்சித்தேர்தல் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரைவில் முக்கிய அறிவிப்பை வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழில் அமைச்சருமான ஜோன் செனவிரத்னவின் தகவல்படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை விடுக்கவுள்ளார்.

இந்த அறிவிப்புக்கு முன்னதாக நிறைவேற்று அதிகாரம் கொண்டு ஜனாதிபதி முறை மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் தொடர்பிலும் கட்சி தீர்மானிக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய தொடர்பில் கட்சியின் தீர்மானம் எதுவாக இருந்தாலும் மக்கள் மத்தியில் கோட்டாபயவுக்குச் செல்வாக்கு உள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காற்றில் பறக்கும் வாக்குறுதி

லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், 2015 இல் லண்டனில் தாமும், பேரவையின் மற்றொரு பிரதிநிதியான வண.பிதா இமானுவேல் அடிகளாரும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்திய பேச்சுகளை நினைவு கூர்ந்து ஒரு கருத்தை கொழும்பு ஆங்கில வார இதழுக்கு வெளியிட்டிருக்கின்றார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எங்களுக்குத் தனது பணியை ஒப்புவமையோடு விவரித்தார். தான் ஒரு ரயிலை செலுத்துகின்றார் என்றார் அவர். 'சில சமயங்களில் அதை வேகமாகச் செலுத்த வேண்டியிருக்கும், மற்றைய சமயங்களில் மெதுவாக ஓட்ட வேண்டியிருக்கும், சிலவேளை நிறுத்த வேண்டிக் கூட நேரும். ஆனால், எந்தச் சமயத்திலும் பின்நோக்கிச் செலுத்த மாட்டேன்' என்று அவர் அப்போது எம்மிடம் தெரிவித்திருந் தார்." - இப்படி சுரேன் சுரேந்திரன் பழைய கிரகித்தலை நினைவு படுத்தியிருந்தார்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போது தமது ரயிலை பின் நோக்கியும் செலுத்தத் தயாராகிவிட்டார் என்பது போலவே தென்படுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் என்ற வாக்குறுதியோடுதான் அவர் ஆட்சிக் கட்டுக்கு வந்தார்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமல்ல, ஜனாதிபதியாக வெற்றி பெற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் கூட அதனையே அவர் வலியுறுத்தி வந்தார்.

ஆனால், இப்போது அவரைத் தலைவராகக் கொண்டுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைத் தொடரவும், 2020 ஜனாதிபதித் தேர்தலில் சு.கவின் வேட்பாளராக அவரை நிறுத்தவும் தீர்மானிக்கின்ற அளவுக்குச் சென்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக, அக்கட்சியின் சார்பில் நல்லாட்சி அரசில் இடம்பெறும் அமைச்சர்கள் ஒன்று கூடி ஒரு தீர்மானம் எடுத்திருக்கின்றார்கள். அதுவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே அக் கூட்டத்தின் தலைவராக வைத்துக் கொண்டு, அதில்தான் அந்த முடிவை எடுத்திருக்கின்றார்கள்!

அந்தக் கூட்டத்தின் முடிவை, அப்படியே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுக்குச் சமர்ப்பித்து, அங்கீகரிக்கச் செய்வதன் மூலம் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவாக அதனை அறிவிக்கச் செய்வதற்கும் முழுமூச்சாக - முழு மும்முரமாக - நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இவ்வளவும் நடக்கும் வரை, தமது கருத்தை வெளிப்படுத்தாமல் 'பிடித்து வைத்த பிள்ளையார்' மாதிரி மௌனம் சாதிக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தாம் எந்தக் கொள்கைத் தீர்மானத்தைப் பிரதானமாக முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாரோ, அதற்கு மாற்றான - முரணான - ஒரு தீர்மானம் எடுக்கப்படுகின்றபோது, மௌனம் சாதித்தால் என்ன அர்த்தம்? மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என்பதுதானே ....!

ஆக, தாம் செலுத்துவதாகக் கூறப்படும் அரசியல் ரயிலை, தமது உத்தேச பழைய திட்டத்துக்கு - எதிர்த் திசையில் - பின்நோக்கியும் - செலுத்துவதற்கு அவர் தயாராகிவிட்டார் என்பதுதான் அர்த்தம் ...!

நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நீடிக்கப் போவதில்லை என்பது உறுதியானால், தம்முடன் எச்ச சொச்சமாக மிஞ்சி, ஒட்டிக்கொண்டிருக்கும் சு.கவினர் கூட, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் ஓடிவிடுவார்களோ என்ற அச்சம் ஜனாதிபதி சிறிசேனவுக்கு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.


நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைப் பொறுத்த வரை அதற்கு இன்னொரு தடவை மஹிந்த ராஜபக்ஷ வரமுடியாது. அவர் இரண்டு தடவைகள் அந்தப் பதவியை வகித்து விட்டார். எனவே, அந்த ஆட்சிமுறை தொடரும் வரை முழு அதிகாரம் மிக்க அரசுத் தலைவராக மஹிந்த வருவதற்கு வாய்ப்பேயில்லை. அதுவே, தற்போது ஜனாதிபதி மைத்திரி பக்கம் எஞ்சி நிற்கும் சு.கவினரை மஹிந்த பக்கம் போகவிடாமல் தடுத்து வைத்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி முறைமை ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்றுக்குப் பதில் கூறக் கூடிய - முழு அதிகாரத்துடனான - பிரதமர் தலைமையிலான ஆட்சி முறைமை ஏற்படுமானால், அந்தப் பதவிக்கு மஹிந்த ராஜபக்ஷ வருவதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டத் தடையும் கிடையாது.

ஆகவே, தற்போதைய ஆட்சி முறையை மாற்றினால், மீண்டும் முழுச் செல்வாக்குடன் அரசுத் தலைவராக வரக் கூடிய வாய்ப்பு மஹிந்தருக்குக் கிட்டிவிடும் என்று ஜனாதிபதி மைத்திரிக்கு நெருக்கமான வட்டாரங்கள் அஞ்சுகின்றனவாம்!

அதுதான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கு சாவுமணி அடிக்கும் திட்டம் கிடப்பில் போடுவதற்கு எடுக்கப்படும் தற்போதைய முயற்சிகளில் பொதிந்து கிடக்கும் சூத்திரம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

குளத்துடன் கோபித்துக் கொண்டு ஏதோ செய்யாமல் ஒதுங்குவது போன்றது இச்செயற்பாடு. மஹிந்தவுக்குப் பயந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க முடியாது என்று பின்வாங்குவது நியாயம் அல்ல. அது, மக்களுக்குப் பகிரங்கமாக அளித்த தேர்தல் வாக்குறுதியை அடியோடு நிராகரிக்கும் அரசியல் தப்பிலித்தனமாகும்.



# சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதே அரசின் பொருளாதாரக் கொள்கை!

## முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

கொழும்பு,ஜன.16

தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. அரசின் பொருளாதாரக் கொள்கையானது தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இல்லை. மாறாக, சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்கான கொள்கையாகவே அமைந்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதனால் தான் அவசியமற்ற முறையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளதோடு அந்த நிதியத்தின் நிபந்தனைகளையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

அரசு முன்னெடுக்கும் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மூலம் மக்கள் மீது வரிச்சுமை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் மக்கள் போராடிப் பெற்றுக்கொண்ட சலுகைகளும் தற்போது பறிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசு இலங்கை இராணுவத்தை மாத்திரமல்லாமல் அரசியல் தலைவர்களையும் சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.''-என்றார். (எ)

# லொத்தர் சீட்டு விற்பனையாளர் இன்று முதல் ஆர்ப்பாட்டத்தில்

கொழும்பு, ஜன.16

லொத்தர் சீட்டு விற்பனை செய்வதை இன்று முதல் இடை நிறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக லொத்தர் சீட்டு விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை 30 ரூபாவாக அறவிடப்படும் என்று அரசு முன்மொழிந்திருந்தது.

இந்த முன்மொழிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தே லொத்தர் சீட்டு விற்பனை செய்வதை இன்று முதல் இடை நிறுத்த உள்ளதாக தேசிய லொத்தர் சபை சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இதேவேளை, லொத்தர் சீட்டு ஒன்றின் விலையை 20 ரூபாயாகக் குறைக்குமாறு கடந்த முதலாம் திகதி லொத்தர் சீட்டு விநியோகஸ்தர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு இலவசமாக மின்சாரம்

## அமைச்சர் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

சமுர்த்திப் பயனாளிகளுக்கு எதிர்காலத்தில் சூரியசக்தி மூலம் இலவசமாக மின்சாரம் வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்எஸ்.பி.திஸாநாயக்க கூறினார்.

எதிர்காலத்தில் மின் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பதிலீடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஹிங்குராங்கொட, சமுர்த்தி மாதிரிக் கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோது அமைச்சர் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"இந்த வேலைத் திட்டத்தை இலங்கை மின்சாரசபையும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சும் இணைந்து மேற்கொள்ள உள்ளது.

அதன்கீழ் அனைத்து வீடுகளுக்கும் சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.'' - என்றார். (எ)

# சகல விடுமுறை தினங்களிலும் மதுசாலைகள் மூடல்

கொழும்பு, ஜன.16

சகல போயா தினங்கள் மற்றும் விசேட விடுமுறை தினங்களில் மதுபானசாலைகள் மூடப்படவேண்டும் என்று இலங்கை மது வரித்திணைக்களம் அறிவித்துள்ளது.


இது தவிர, தேசிய சுதந்திர தினம், சிங்கள, தமிழ் பெருநாள் தினத்துக்கு முந்திய தினம் மற்றும் பெருநாள் தினம் ஆகிய தினங்களில் நாட்டிலுள்ள சகல மதுபானசாலைகளும் மூடப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் திணைக்களம் கோரியுள்ளது. அத்துடன், முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள் தினம், உலக போதை ஒழிப்பு தினம், நத்தார் தினம் ஆகிய நாள்களிலும் மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன.

மேலும், குறுகியகால அறிவித்தல்களின் மூலம் மதுபானசாலைகள் மூடப்படுவதற்கு அரசு விடுக்கும் தினங்களிலும் மதுபானசாலைகள் மூடப்படும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

## நாளை

17.01.2017
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் பி.ப 4.01 வரை
திதி : பஞ்சமி பி.ப 3.17 வரை
சுபநேரம் : 11.05 – 12.35 வரை
இராகுகாலம் : 3.35 – 5.05 வரை

# கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!





வவுனியா, ஜன.16

வவுனியா, கன்னாட்டி கணேசபுரம் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தமது கிராமத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறு தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா, கன்னாட்டி கணேசபுரம் பகுதியிலுள்ள இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் புதிய நிர்வாகத் தெரிவைப் பொதுமக்கள் முன்னிலையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்தே அந்தப் பகுதி மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல ஆண்டுகளாக நிர்வாகம் தெரிவு செய்யப்படவில்லை என்றும் தற்போதைய நிர்வாகத்தினரால் கிராமத்தின் தேவைகளை அறிந்து கிராமத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் அந்தப் பகுதி மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததுடன், புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்வதற்கு வவுனியா மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடித் தீர்வைப் பெற்றுத்தருவர் என்று தெரிவித்திருந்தனர். (ஐ-100)

# தூதரகங்களில் சேவையாற்ற பொருத்தமற்றோர் நியமனம்

வெளிநாட்டுச்சேவையில் ஈடுபடாதவர்களுக்கு வெளிநாட்டுத் தூதரகங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ அரசில் நைஜீரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் தூதராகச் செயற்பட்ட வர்த்தகர் ஒருவர் தற்போது கட்டாருக்கான தூதராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

பொதுவாக பலராலும் ஏ.எஸ்.பி. லியனகே என்று அறியப்பட்ட குறித்த வர்த்தகர் ஜனாதிபதியால் கட்டாருக்கான தூதுவர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பில் இதுவரை கட்டார் அரசுக்கு அறிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராஜதந்திரப் பிரிவுகளில் மிகவும் உயர்ந்த மட்டத்துக்கான புதிய அரசியல் நியமனமாக இது அமைந்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார சேவையில் இல்லாத 33 பேர்வரை தூதுவர்களாகவும், உயர்ஸ்தானிகர்களாகவும் கொன்சூலர் ஜெனரல்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாலைதீவுக்கான பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணத்துவம் மிக்கவர்களை இராஜதந்திரிகளாக நியமிப்பதாக உறுதி வழங்கி கடந்த 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் குறிப்பிடத்தக்க அளவில் அரசியல் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களில் வெளிவிவகார சேவையில் இருந்து ஓய்வுபெற்ற நான்கு அதிகாரிகளும் ஆயுதப் படையில் இருந்து ஓய்வுபெற்ற நான்கு அதிகாரிகளும் இராஜதந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர், இரண்டாம் நிலைச்செயலாளர், கொன்சூலர், அமைச்சரின் கொன்சூலர், தூதரக பிரதி தலைமை அதிகாரி மட்டத்தில் குறைந்தது 14 அரசியல் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெஹ்ரானுக்கான அமைச்சின் கொன்சூலராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவு மூத்த விரிவுரையாளர் எம்.எஸ். அனீஸ் பெயரிடப்படவுள்ள நிலையில், இந்த எண்ணிக்கை இந்த வாரம் 15 ஆக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தில், சிறிலங்காவின் இராஜதந்திரப் பிரிவில் அதிகம் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசின் வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர பதவியேற்ற பின்னர் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த 27 அரசியல் நியமனங்களை இரத்துச் செய்திருந்தார்.

63 வெளிவிவகார தூதரகச் சேவையில், வெளிவிவகார சேவை அனுபவமற்றவர்களின் நியமனத்தை 19 ஆக மட்டுப்படுத்துவதாக மங்கள சமரவீர கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இடியன் துப்பாக்கியுடன் தம்பதியினர் கைது!

வவுனியா, ஜன.16

வவுனியாவில் கைக்குண்டு மற்றும் இடியன் துப்பாக்கியுடன் காட்டில் வாழ்ந்து வந்த கணவன் மனைவியை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா - பாலமோட்டை காட்டில் வசித்து வந்த அந்தத் தம்பதியினரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஓமந்தை பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது வவுனியா, பாலமோட்டை காட்டுப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் இவர்கள் வசித்து வந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, கைக்குண்டு, இடியன் துப்பாக்கி என்பனவற்றை மீட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் காட்டில் பல காலமாக வசித்து வந்துள்ளனர்.

கணவன் மீது மாங்குளம், ஓமந்தை ஆகிய பொலிஸ் நிலையங்களில் ஏற்கனவே கசிப்பு உற்பத்தி செய்து வருகிறார்என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 6,468 பேர் 3 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி

கொழும்பு, ஜன.16

உயர்தரப் பெறுபேறுகளில் நாடளாவிய ரீதியில் 6 ஆயிரத்து 468 பாடசாலை பரீட்சார்த்திகள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் இந்தப் புள்ளி விவரத் தகவல்களை வெளியிட்டுள்ளது. நூற்றுக்கு 3.5 வீதமான மாணவ, மாணவியர் உயர்தரப் பரீட்சையில் இந்த முறை மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 238 பாடசாலைப் பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளனர். இது 63.36 வீதம் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நண்பனின் இழப்பைத் தாங்காத சிறுவன் உயிரை மாய்த்தான்!

## கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் சம்பவம்

கிளிநொச்சி, ஜன.16

நண்பனின் இழப்பைத் தாங்க முடியாத சிறுவன் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

நாகலிங்கம் கஜேந்திரன் (வயது 16) என்ற இந்தச் சிறுவன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காகக் காத்திருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மரணம் தொடர்பில் அயலவர்களும் உறவினர்களும் கருத்துத் தெரிவிக்கையில்-

கஜேந்திரனின் நண்பன் ஒருவன் அதே கிராமத்தில் அண்மையில் உயிரை மாய்த்துக் கொண்டான் என்றும் அதன் பின்னர் கஜேந்திரன் விரக்தியுடனும் வேதனையுடனும் காணப்பட்டான் என்றும் அதைத் தொடர்ந்து இந்த அனர்த்தம் நிகழ்ந்தது என்றும் கூறினர்.

இந்த மரணம் தொடர்பில் மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி யு.டி.ஏ. பிரியந்தவும், திடீர் மரண விசாரணையை க.திருலோகமூர்த்தியும் மேற்கொண்டனர். (இ-70)

# தனங்களப்பு வயல்கள் கருகும் நிலையில் !

நாவற்குழி, ஜன.16

காலபோக நெற்செய்கை இவ்வருடம் போதிய மழை இல்லாததால் கருகி அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. கிணறுகள், குளங்கள், வாய்க்கால் மூலம் நெற்பயிர்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்ற போதிலும் அவை அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தென்மராட்சியின் தெற்குப் பகுதியான தனங்களப்பு வயல் வெளிப்பகுதியிலும் நெற்பயிர்களுக்கு அழிவு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ-22)

# சீன உடன்படிக்கை தொடர்பான உத்தேச ஆவணம் நாடாளுமன்றில்

கொழும்பு, ஜன.16

உத்தேச சீன உடன்படிக்கை குறித்த ஆவணம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சீனாவுடன் இணைந்து அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத் திட்டம் தொடர்பிலான இரு தரப்பு உடன்படிக்கை குறித்த உத்தேச ஆவணமே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.


எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றில் இந்த உத்தேச ஆவணத்தைச் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் உத்தேசத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றுக்கும் நாட்டுக்கும் விளக்கமளிக்க முடியும் என்று அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விவாதமொன்றை நடத்த எதிர்க்கட்சிகள் நேரத்தை ஒதுக்கிக் கேட்டால் அதனை வழங்கத் தயார் என்று அரச பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)








உழவர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் இஞ்ஞாசியார் தேவாலயம் மற்றும் தாண்டவன்வெளி புனித காணிக்கை மாதா தேவாலயம் ஆகியவற்றில் பொங்கல் நிகழ்வு மற்றும் பண்பாட்டுத் திருப்பலி ஆகியன நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றன. இந் நிகழ்வுகளில் கிறிஸ்தவ மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச)

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கிண்ணியாவில் நடவடிக்கை



கிண்ணியா,ஜன.16

திருகோணமலை கிண்ணியாவின் பல பகுதிகளிலும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளனர். இந்நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கிண்ணியா பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் புகை விசிறும் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கிண்ணியாவின் பெரியாற்று முனைப் பகுதியில் கிண்ணியா பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். எம்.அஜித் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புகை விசிறும் நடவடிக்கை மும்முரமாக நடைபெற்றது. அண்மையில் இப்பகுதியில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையால் இங்கு இரண்டாவது தடவையாகவும் புகை விசிறும் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குச்சவெளியில் வெடிபொருள்கள் மீட்பு

திருகோணமலை,ஜன.16

குச்சவெளி நீல பனிக்கன் வாவி பிரதேசத்தில் 60 மில்லிமீற்றர் வகையான 4 மோட்டார் குண்டுகள், 89 மில்லிமீற்றர் வகையான 11 குண்டுகள் ஆகியனமீட்கப்பட்டுள்ளன.

விசேட படையணி முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இந்தவெடி பொருள்கள் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனஎன்பதுடன், மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச)


அருந்ததி மணமக்கள்

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **7290 \| 1989 \| வே**<br>யாழ்ப்பாணம் \| இலண்டன்<br>Administrator \| அத்தம் (கன்னி)<br>கி.பா : 2 \| 165 செ.மீ<br>எ.பா : அழகான பட்டதாரி பெண் | **6822 \| 1989 \| வே**<br>காரைநகர் \| இலண்டன்<br>Teacher \| திருவாதிரை (மிதுனம்)<br>163 செ.மீ<br>எ.பா :.வெளிநாடு. Accountant , Engirreer விரும்பத்தக்கது. |
| **6732 \| 1987 \| வே**<br>திருநெல்வேலி \| சிங்கபூர்<br>Micro Electrical Engineer<br>மிருகசிரிடம் (மிதுனம்)<br>கி.பா : 3 \| 170 செ.மீ<br>எ.பா: பட்டதாரி (வைத்தியர், பொறியியலாளர்) | **7101 \| 1987 \| வே**<br>யாழ் \|அவுஸ்திரேலியா<br>Chemical Engineer \| உத்தரம் (சிம்மம்)<br>கி.பா : 18 \| 173 செ.மீ<br>எ.பா : Doctor , Engineer. Canada , America விரும்பத்தக்கது. |
| **6924 \| 1986 \| கோ**<br>மானிப்பாய் \| இலண்டன்<br>Engineer \| திருவாதிரை (மிதுனம்)<br>கி.பா 12 \| 180 செ.மீ<br>எ.பா : அரசாங்க தொழில் புரியும் படித்த. இலண்டன் அல்லது இலங்கையில் வதியும் பெண். | **7083 \| 1981 \| வே**<br>காரைநகர் \| இலண்டன்<br>Software Engineer<br>திருவோணம் (மகரம்)<br>கி.பா : 50 \| 165 செ.மீ |
| **6726 \| 1978 \| வே**<br>இளவாலை \| இலண்டன்<br>Electronic Business \| சித்திரை(கன்னி)<br>சூரி . செவ் 01 \| கி.பா 42 \| 168 செ.மீ<br>எ.பா : சீதனம் பேசி தீர்மானிக்கலாம். | **6149 \| 1977 \| வே**<br>காரைநகர்\| அவுஸ்திரேலியா<br>Technician Officer<br>ஆயில்யம் (கடகம்)<br>கி.பா : 31 \| 162 செ.மீ<br>எ.பா : பட்டதாரி, நல்ல தொழில் செய்பவர். |

மேலதிக விபரங்களுக்கு :
011 406 32 82 | 021 492 75 27 | 077 716 45 24 | www.arunthathee.com


# தோல்வி அச்சம் காரணமாகவே அரசு இழுத்தடிக்கிறது தேர்தலை

## இப்படிக் கூறுகிறார் உலமாக் கட்சித் தலைவர்

அம்பாறை,ஜன.16

மஹிந்த ராஜபக்ஷ அணி பலம் பெற்றுள்ள நிலையில் தமது கட்சி படுதோல்வியடைந்துவிடும் என்கின்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசு கடந்த ஒரு வருட காலமாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகிறது.

இந்நிலையில் எந்த தேர்தல் நடைபெற்றாலும் ஜனாதிபதி மைத்திரியினதும், பிரதமர் ரணிலினதும் கட்சிகள் தோல்வியடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

-இவ்வாறு உலமாக் கட்சித் தலைவர் அஷ் ஷெய்க் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாத நிலையில், அவரின் ஆதரவுடன் கோட்டாபய அல்லது பஷில் ராஜபக்ஷ போட்டியிடுவார். அவ்வாறு நிகழ்ந்தால் அவர்களுக்கானவெற்றிவாய்ப்பே அதிகம் உள்ளது.

மைத்திரி ஆட்சிக்கு வந்தால் இனவாதம் ஒழிக்கப்பட்டு, தாம் நிம்மதியாக வாழ முடியும் என கற்பனை செய்த சிறுபான்மைச் சமூகங்கள் இன்று தலையில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கும் அளவுக்கு மைத்திரி ஆட்சியில் இனவாதிகளின் செயற்பாடுகள் உள்ளன. அது மாத்திரமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமது வர்த்தகம் நன்றாக அமையும் என எதிர்பார்த்த கொழும்பு மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களும் நாட்டின் ஏனைய நகர, பிரதேச முஸ்லிம்களும் தமது வர்த்தகங்களை இழந்து நடுத்தெருவில் நிற்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் படுதோல்வி அடைவார் என்பது உறுதியாகியுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த மக்கள் கூட ரணில் பிரதமரான இந்த ஆட்சியில் வெறுத்துப்போயுள்ளனர்.

அதேவேளை ஒரு தடவை மட்டுமே ஜனாதிபதியாக இருப்பேன் எனக்கூறிய மைத்திரி, தேர்தலில் போட்டியிட்டால், தனது வாக்கைத் தானே மீறியவர் என்ற வரலாற்றுப் பெயரை அவருக்கு ஏற்படுத்தும் என்பதால் அவர் போட்டியிட மாட்டார். முஸ்லிம் சமூகம் தாம் எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்துவது என்பது பற்றி நிதானமாகச் சிந்தித்துச்செயற்பட முன்வர வேண்டும் என்பதையே எமது உலமா கட்சி வலியுறுத்துகிறது. -என்றார். (ச)

## 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் மட்டக்களப்பில் வறட்சியால் பாதிப்பு!

மட்டக்களப்பு,ஜன.16

வறட்சியால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த மாவட்ட அபிவிருத்திக்குழு விசேட கூட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த மாவட்ட அபி விருத்திக் குழு விசேடகூட்டத்தில், இம்முறை பருவ மழை வீழ்ச்சி போதியளவு கிடைக்காமல் பொய்த்துப் போனதால் மாவட்டத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

வறட்சியின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் உட்பட ஒட்டுமொத்தமாக 70 ஆயிரம் குடும்பங்களுக்கும் முக்கியமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளபகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் விநியோகிப்பது தொடர்பாகவும், வறட்சியான கால நிலை மேலும் நீடிக்குமானால் அதற்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாக மேற்கொள்ளப்படவேண்டிய முன் ஆயத்தப் பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ச)

## காருடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் படுகாயம்!



மட்டக்களப்பு,ஜன.16

மட்டக்களப்பு - கல்லடி பகுதியில் மோட்டார் சைக்கிள், காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மூவர் படுகாயமடைந்தனர்.

கல்லடி இராமகிருஷ்ணமிஷனுக்கு அருகில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள், காருடன் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மோட்டார் சைக்கிள் கடும் சேதங்களுக்குள்ளானதுடன், காரும் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மதுபோதையில் காணப்பட்டனர் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

காலைக்கதிர்
Kalaikkathir



# சீனக்குடா எண்ணெய்க் குதங்களை பயன்படுத்தும் முடிவை தற்காலிகமாக இடைநிறுத்தினார் பிரதமர் ரணில்!


கொழும்பு, ஜன.16

இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட சீனக்குடா எண்ணெய்க் குதங்களில் மூன்றை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும் முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் பொறுப்பேற்கும் வரையில், இந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.





மின்சார உற்பத்திக்காக இந்த குதங்களில் எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், சீனக்குடா எண்ணெய்க் குதங்களை ஆய்வு செய்வதற்கு மேற்கொண்ட இரண்டு முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்தியன் ஒயில் நிறுவன அதிகாரிகள், இலங்கை அதிகாரிகளை எண்ணெய்க் குத வளாகத்துக்குள் அனுமதிக்காமல் தடுத்து வைத்தனர் என்று சர்ச்சைகள் எழுந்திருந்தன.

குத்தகைக்கு வழங்கப்பட்ட எண்ணெய்க் குதங்களில் மூன்றை மீளவும் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வது குறித்து, புதிய இந்தியத் தூதுவருடன் பேச்சு நடத்த வேண்டியிருப்பதாலேயே, பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று, பெற்றோலியக் கூட்டுத்தாபன மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்திக்காக, எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு, அவசரமாக மூன்று எண்ணெய்த் தாங்கிகள் தேவைப்படுகின்றன என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியத் தூதுவர் தரம்ஜித்சிங் சந்து, எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நிஷா பிஸ்வாலுக்கு பிரியாவிடை!



கொழும்பு, ஜன.16

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலராகப் பதவி வகித்த நிஷா பிஸ்வால், இராஜாங்கத் திணைக்களத்தில் இருந்து விடைபெறவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி, டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதும், அமெரிக்க இராஜாங்கச் செயலராக ரெக்ஸ் ரில்லர்சன் பதவியேற்கவுள்ளார்.

அத்துடன், இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிய பதவிகளிலும் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய, கடந்த மூன்றரை ஆண்டுகளாக தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராகப் பணியாற்றிய, நிஷா பிஸ்வாலுக்குப் பதிலாக புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

நிஷா பிஸ்வாலுக்கு இராஜாங்கத் திணைக்களத்தில் பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வொஷிங்டனில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில், இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசமும் பங்கேற்றுள்ளார்.

தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலராகப் பணியாற்றிய நிஷா பிஸ்வால், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், ஆறு தடவைகள் கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

மேலும், இலங்கையில் ஆட்சி மாற்றம் உள்ளிட்ட முக்கியமான காலகட்டத்தில் இவர், இலங்கை விவகாரங்களில் தீவிர கவனம் செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் இன்னமும் வழங்கப்படவில்லை!

## ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது

கொழும்பு, ஜன.16

இலங்கைக்கு இன்னமும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்படவில்லை என்றும், இதுதொடர்பான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை கடுமையான நிபந்தனைகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் வழங்குவதற்கு ஐரோப்பிய ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைத்து விட்டது என்று அமைச்சர்கள் பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய பணியக அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில், இது ஒரு பரிந்துரைதான். ஐரோப்பிய நாடாளுமன்றமும், பேரவையும் தான் இதனை முடிவு செய்ய வேண்டும்.

எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதிக்கும், மே 12ஆம் திகதிக்கும் இடையில்தான் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை எந்த நிபந்தனைகளினதும் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானுக்கான விஜயத்தை ரத்துச் செய்தார் ஜனாதிபதி மைத்திரி!



கொழும்பு, ஜன.16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த வாரம் ஈரானுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி, ஈரானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், இந்தக் திகதிகளில் ஜனாதிபதியால், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு முக்கிய பணிகள் இருப்பதால், இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதாக ஈரானிய அதிகாரிகளுக்கு, இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கும் நிகழ்வில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரி திட்டமிட்டிருந்தார்.

ஆனால், இந்த நிகழ்வுக்கு வெளிநாட்டு விருந்தினர்களை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை என்று வெளிவிவகார கொள்கை ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, அந்த திட்டத்தையும் ஜனாதிபதி கைவிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி மைத்திரி ரஷ்யாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

மார்ச் 21ஆம் திகதி தொடக்கம் 4 நாள்கள் அவர் ரஷ்யாவில் விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விஜயத்தை முடித்துக் கொண்டு, நேரடியாக டாக்காவுக்குச் செல்லவுள்ளார்.

அதைத் தொடர்ந்து, மார்ச் 26ஆம் திகதி நடக்கும் பங்களாதேஷின் சுதந்திர நாள் விழாவில் பங்கேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# அழிவடைந்து வருகின்றன பாரம்பரிய கைத்தொழில்கள்!

## மட்பாண்டத் தொழிலாளர்களது வாழ்வாதாரம் பாதிப்பு



ஒட்டுசுட்டான், ஜன.16

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பாரம்பரியமான கைத் தொழில்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு உரியவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலேயே உள்ளீட்டுப் பொருள்களைப் பெற்று மேற்கொள்ளக் கூடிய கைத்தொழில்களை வளர்ப்பதற்கும் அவற்றை அழிவிலிருந்து காப்பதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு, கூழாமுறிப்பு குளத்தை அண்டிய பகுதிகளில் கிடைக்கும் களிமண்ணைக் கொண்டு செய்யப்படும் மட்பாண்ட கைத்தெழில் அண்மைய நாள்களில் கவனிப்பாரற்று அழி வடைந்து காணப்படுகிறது.

உரிய அதிகாரிகளின் ஒத்துழைப்பு போதிய அளவில் கிடைப்பதில்லை என்றும் முள்ளி யவளையில் காலாகாலமாக மேற்படி கைத் தொழிலைத் தமது பிரதான தொழிலாக மேற்கொண்டு வரும் முயற்சியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த வருட பொங்கலுக்குக் கூடத்தாம் தயாரித்த மண்பானைகள் பெருமளவு விற்பனையாகவில்லை என்றும் பிளாஸ்ரிக் மற்றும் சில்வர் பொருள்கள் மீதே மக்களின் நாட்டம் அதிகம் காணப்படுகிறது என்றும் அந்த உற்பத்தியாளர் கவலை தெரிவித்தார்.

மட்பாண்டத் தொழிலாளர்கள் தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் இதன் மூலம் இந்தத் தொழிலாளர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-82)



போரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ


## முள்ளிவாய்க்காலில் 'தாயக விருட்சம்'!

ஒட்டுசுட்டான், ஜன.16

போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களது கல்வி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்காகச் சுவிஸ் வாழ் உறவுகளால் ஒழுங்கு செய்யப்பட்ட 'தாயக விருட்சம்' எனும் அமைப்பின் அங்குராப்பண நிகழ்வும் போரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் இறுதி யுத்த காலத்தில் வைத்தியசாலையாக இயங்கிய முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

உடையார்கட்டு அ.த.க. பாடசாலை அதிபர் ந.அமிர்தநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 30 மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு தொகையும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-82)





## கிளிநொச்சி வைத்தியசாலையில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு தொகுதி

கிளிநொச்சி, ஜன.16

வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையின் நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சுத்தமான குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மூன்று லட்சம் ரூபா பெறுமதியில் இந்தக் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி வைத்தியாலையில் பொருத்தப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்புத் தொகுதியை வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

3 நோயாளர் விடுதிகளுக்கும், ஊழியர் ஓய்வறைக்கும் இந்தக் குடிதண்ணீர் தொகுதி பொருத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை அடுத்து மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ)

## மேய்ச்சல் தரை இன்மையால் பாலுக்கு பெரும் தட்டுப்பாடு!

*கிளிநொச்சி, ஜன.16*

*வன்னியில் பல கிராமங்களில் பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. மாடுகளின் மேய்ச்சலுக்கு மேய்ச்சல் தரைகள் இன்மையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. மேய்ச்சல் தரவைகளை ஒதுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

*இந்த நிலையில் கிளிநொச்சி, கோட்டைகட்டிய குளம், அம்பலபெருமாள், தட்டுவன்கொட்டி, பூநகரி உள்ளிட்ட பல கிராமங்களில் மாடுகளின் மேய்ச்சலுக்கான தரைகளை ஒதுக்கித் தரவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

*''எமது பிரதேசங்களில் மேய்ச்சல்தரைகள் இல்லை. இந்த விடயத்தில் நிர்வாகங்கள் இதுவரை கரிசனை எடுக்கவில்லை. வன்னியில் கால்நடை வளர்ப்பு கணிசமான வருமானத்தை பலருக்கு ஏற்படுத்தித்தரும். இந்த நிலையில், இவ்வாறாக மேய்ச்சல்தரை இன்மை பிரச்சினையால் வன்னியில் பால் உற்பத்தியின் நிலை வீழ்ச்சியடைந்துள்ளது.'' - என்று கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.*



## முல்லை. பொலிஸ் பரிசோதனை!

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதானமான பொலிஸ் நிலையமான முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதனை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்தவால் மேற்கொள்ளப் பட்டது.

முல்லைத்தீவு செல்வபுரம் மைதானத்தில் அணிவகுப்பும் பரிசோதனைகளும் இடம்பெற்றன.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையின்போது பொலிஸ் நிலையத்தின் சகல பிரிவுகளிலும் பொலிஸாரால் பேணப்படும் ஆவணங்கள் மற்றும் பொலிஸாரின் சீருடை, வாகனங்கள் என்பன தொடர்பாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-81)

## முல்லை. நீராவிப்பிட்டி வாரச் சந்தையை இடம்மாற்றுவதற்கு எதிராக கவனவீர்ப்பு!





ஒட்டுசுட்டான், ஜன.16

முல்லைத்தீவு, நீராவிப்பிட்டி பகுதியில் இயங்கி வந்த வாரச் சந்தையை அதே இடத்தில் தொடர்ந்தும் இயங்க விடுமாறு கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

இந்த வாராந்த சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சில வியாபாரிகளால் கவனவீப்பு ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சந்தை இடம் பெற்றுவரும் நீராவிப்பிட்டி பகுதியில் நடத்தப்பட்டது.

இந்தச்சந்தையைபொருத்தமற்ற இடத்துக்கு மாற்றுவதால் தமது வாழ்வாதாரம் பாதிப்படையும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இதே வேளை, நேற்று முதல் நீராவிப்பிட்டி பகுதியில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ள பிரதேச சபையினால்தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேசத்தில் கடந்த நாள்களில் ஆங்காங்கே அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தன. நேற்று இந்தச் சந்தையானது அதே இடத்தில் உள்ளக வீதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-82)

# உலகை ஏமாற்றும் ஒரே நோக்கத்தில் கண்துடைப்பு நடவடிக்கையில் அரசு!

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை விசனம் தெரிவிப்பு

''இலங்கையின் தொடக்கத்தில் இருந்த தமிழர் இனப் பிரச்சினைக்கான அத்தனை காரண காரியங்களும் மேலும் வலுவடைந்த நிலையில் உலகை ஏமாற்றும் ஒரே நோக்கத்துக்காக சில கண்துடைப்பு நடவடிக்கைகளை சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்றது.

''பிராந்திய நலன் எனும் சுயநலன் சார் நிலைப்பாட்டுக்குள் தம்மைத் தாமே கட்டுண்டவர்களாக்கிக் கொண்டிருக்கும் உலக நாடுகள் தமக்கு ஒத்திசைவான போக்கில் செயற்படும் மைத்திரி-ரணில் கூட்டாட்சியின் கண்துடைப்பு நடவடிக்கைகளை இமாலய முன்னேற்றமாகக் குறிப்பிட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் நேரடியாகவும் மறை முகமாகவும் ஈடுபட்டு வருகின்றன.''

இவ்வாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

தைப்பொங்கலை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையின் வழியே புதிதாகப் பிறந்துள்ள தையில், பிறப்பின் தடத்தில் எமது இலட்சியக் கனவான சுதந்திர தமிழீழத்தை வென்றெடுக்க உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைவோம்.

எமது உறவுகளைக் கொன்றொழித்து தாய் மண்ணைச் சுடுகாடாக்கி மாபெரும் இனப்படுகொலையை நிகழ்த்திய மஹிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்க வேண்டுமென்ற கூட்டு மன உணர்வின் விளைவாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனா மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசும் தமிழர்களை அழித்தொழித்து அடிமைப்படுத்தி சிங்கள, பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை இலங்கைத் தீவு முழுமைக்கும் நிலைநாட்டுவதிலேயே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தின் போது இலங்கையில் மோசமடைந்திருந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிறைவேற்ற அப்போதைய ஆட்சியாளராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு நிராகரித்து வந்ததை அடுத்து, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கடந்த 2010 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில் தற்போது நிபந்தனைகளுடன் மீண்டும் வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது. ஆனாலும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீதான தடையை நீடிக்கச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் இருக்கின்றன.

எமது ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே அதனை சாத்தியமாக்க முடியும். குறிப்பாக தாயகத்தில் நடத்தப்படும் மக்கள் போராட்டங்களே அதற்கான விதையாகும்.

இலங்கை அரசின் கண்துடைப்பு நடவடிக்கைகளுக்குத் திருப்திப்பட்டுவிடாது எமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வரை தொடர்ந்து போராட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தாயகம் - தேசியம் - தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டுக்கு வேட்டு வைக்கும் விதமாக வடக்கு, கிழக்காக தமிழர் தாயகத்தை பிளவுபடுத்தியுள்ளார்கள். இதனை முறியடிக்க வேண்டுமாயின் எதிர்வரும் 21 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியில் அலைகடலென தமிழர்கள் அணிதிரள வேண்டும்.

மைத்திரி - ரணில் கூட்டாட்சியின் நல்லாட்சி முகத்திரையை யாழ். முற்றவெளி எழுக தமிழ் எழுச்சிப் பேரணி கிழித்தெறிந்திருந்தது.

அந்த நிலையை மேலும் வலுவாக்குவதற்கு மட்டக்களப்பு 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணி மாபெரும் வெற்றியைப் பெற வேண்டும்.

இவ்வாறு தாயகத்தில் நடைபெறும் மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை விதையாக்கி புலம்பெயர் செயற்பாட்டுத் தளம் வீச்சுப் பெறுவதன் மூலமே எமக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே, தைப் பிறப்பின் தடத்தில் துயரங்கள் நீங்கிய நல்வாழ்வின் வழியே விடுதலை வசமாகும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்ப் புத்தாண்டை எதிர்கொள்வோம்.

சலுகைகளுக்கு விலை போகாது உரிமைக்காய் உறுதியோடு போராடுவோம் என்ற திடமான நிலையெடுத்து பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டில் உலகத் தமிழர்கள் ஒன்றுபடுவோம்.- என்றுள்ளது.

(ஐ)

# மைத்திரி - புடின் மார்ச்சில் சந்திப்பு

கொழும்பு, ஜன.16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது என்று ரஷ்ய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு செல்லவுள்ளார்.

வன்னி இறுதி யுத்தத்தின் போது இராணுவத்துக்கு பீ.எம்.ரி. யுத்த டாங்கிகளை வழங்கி ரஷ்யா உதவியதாகவும், ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இலங்கைக்கு சார்பாக ரஷ்யா குரல் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# மஹிந்த காலத்தில் கொடுப்பனவு மைத்திரி காலத்தில் கடன் வசூல்!

*கொழும்பு, ஜன.16*

*2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வறுமையான குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபாவை மீண்டும் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுவோருக்கு இந்த அடிப் படையில் மஹிந்த காலத்தில் 1.4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. எனினும் இது கடனா? என்பது குறித்து எவ்வித தகவலும் அப்போது வெளியிடப்படவில்லை.*

*இதன் காரணமாக இது மஹிந்த ராஜபக்ஷ அரசால் தமக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பாகவே இந்தக் கொடுப்பனவை வாங்கியிருந்த மக்கள் எண்ணியிருந்தனர்.*

*எனினும், இந்த நிதி, கடனாகவே வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனை தவணைக் கொடுப்பனவுகளாக திருப்பிச் செலுத்துமாறும் சமுர்த்தி அதிகாரிகள் பயனாளிகளிடம் வலியுறுத்தியுள்ளனர்.*

*சில இடங்களில் பணத்தை முழுமையாகச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொண்ட மக்கள் உடனடியாக அதனைச் செலுத்த முடியாது சிரமம் அடைகின்றனர்.(ஐ)*

# கோப்பாய் கோட்ட தைப்பொங்கல் விழா

சுன்னாகம், ஜன.16

கோப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலகம் நடத்தும் தைப்பொங்கல் விழா நாளை காலை 9 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் ச.லலீசனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வரவேற்புரையைக் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆற்றுவார். ஆசியுரைகளைப் புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதம குரு சோமசுந்தரக் குருக்கள், யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி மீ. சிறிவிமலதேரர், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட் சகோதரி மரியஜீவந்தி, யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம். எஸ்.எம். அஸ்ரப் ஆகியோர் ஆற்றுவர்.

(ஐ-54)

# சமாதான முன்னெடுப்புகளுக்கு பிள்ளையான் மிக முக்கியமானவராம்

## வண. உவதென்னே சுமணதேரர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.16

சமாதான முன்னெடுப்புச் செயற்பாடுகளுக்குப் பிள்ளையான் மிகவும் முக்கியமானவர். இவர் சிறையில் இருக்க வேண்டியவர் அல்லர். வெளியில் இருந்து மக்களுக்கு பணி செய்ய வேண்டியவர்.

இவ்வாறு மாளிகாவத்தை ஸ்ரீ போதிராஜராமய விகாராதிபதியும் போதிராஜராமய கல்வி கலாசார மன்றத்தின் தலைவருமான உவதென்னே சுமணதேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை நேரில் சென்று பார்வையிட்டார் தேரர்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறைச்சாலைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த நான், பிள்ளையானுடன் சில மணிநேரம் பேசினேன். தைப்பொங்கலை முன்னிட்டுப் பிள்ளையானைப் பார்வையிட்டோம்.

அவரது நலன்கள் குறித்துக் கேட்டறிந்து கொண்டோம். பிள்ளையான் ஒரு சாதாரண மனிதர் அல்லர் அவர் ஒரு முன்னாள் முதலமைச்சர்.



அவர் உள்ளே இருக்க வேண்டியவர் அல்லர். அவர் வெளியே இருந்து பல்வேறு பணிகளை மக்களுக்காகச் செய்ய வேண்டியவர்.

சமாதானத்தையும் ஒற்றுமையையும் கிழக்கிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்.

இங்குதான் மூன்று சமூகங்களும் நிம்மதியாக வாழ்கின்றன.

அத்தகைய சமாதான முன்னெடுப்புகளுக்கெல்லாம் பிள்ளையான் போன்றவர்கள் தேவைப்படுகின்றனர்.- என்றார்.

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 63



பொன்.வேணு கிருஷ்ணா

U.S. Lending Support to Baltic States Fearing Russia

அந்தப் பேட்டிக்குப் பின்னர்நடந்த குழு விவாதத்தில், NBC news நிகழ்ச்சி தொகுப்பாளர் ஆண்ட்ரியா மின்செல் கூறுகையில், ரஷ்யா, ஜனநாயகக் கட்சி தலைமையை ஊடுருவி எடுத்ததாகக் குற்



(Observers during a military exercise involving multiple nations at Camp Adazi in Latvia in 2015.CreditBryan Denton for The New York Times)

றஞ்சாட்டப்படும்தகவல்களை ‘ஆயுதமாக்குகிறது’ -என்றார். நியூயோர்க் டைம்ஸ் கட்டுரையாளர் டேவிட் புரூக்ஸ் அறிவிக்கையில், ‘‘புடின், இதழாளர்களைப்படுகொலை புரிந்தவர், அவரது சொந்த நாட்டில் ஜனநாயக நடைமுறைகளை அழித்தவர், இப்போது அதையே அவர் நம் நாட்டில் செய்ய முயற்சிக்கின்றமைக்குரிய சுதந்திரத்தை உணர்கிறார்.” - என்றார். (In the panel discussion following the interview, NBC news commentator Andrea Mitchell declared that Russia “weaponized” information it allegedly obtained by hacking the Democratic leadership. New York Times columnist David Brooks proclaimed, “Putin is a guy who murders journalists, who’s destroyed the democratic process in his own country, and now suddenly he feels the freedom to try to do that in our country.”)



**சிரியாவின் உள்நாட்டு போர் சம்பந்தமாக ரஷ்யாவை நோக்கிய அதிகரித்த மோதல் நிலைப்பாட்டுக்குப்பொது ஆதரவைத் திரட்டுவதே அதன் நோக்கம்.**



அரசாங்கத்தால் ஆதார பூர்வமாகக் காட்டமுடியாத குற்றச்சாட்டுக்களைச் சர்ச்சைக்கிடமற்ற உண்மையாக எடுத்துக்காட்டி தொடர்ந்து கொண்டிருக்கும் ஊடகத் தாக்குதலானது, அப் பிரசாரம் அமெரிக்காவின் ‘ஜனநாயக நடைமுறை கள்’ மீதான எந்தவோர் அந்நிய நாட்டுத்தாக்குதலால் அல்ல, அறிவிக்கப்படாத மற்றும் (மக்கள் செல்வாக்கில்லாத) அரசியல் நோக்கங்களால் உந்தப் பட்டுள்ளது என்ற உண்மையை நிரூபிக்கிறது. ஐந்து



மாதங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் முதன் முதலில் ஹிலாரி கிளிண்டனின் ஜனாதிபதி பிரசாரத்துக்கு எதிராகத் திருப்பிவிடப் பட்ட ரஷ்ய ஊடுருவல் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டமையில் இருந்து, குறிப்பாக சிரியாவின் உள் நாட்டு போர் சம்பந்தமாக ரஷ்யாவை நோக்கிய அதிகரித்த மோதல் நிலைப்பாட்டுக்குப் பொது ஆதரவைத் திரட்டு வதே அதன் நோக்கமாக இருந்துள்ளது.

அண்மித்து ஆறு ஆண்டுகளாக, சி.ஐ.ஏ. மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஒரே அரபு கூட்டாளியான சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தைப் பதவியிலிருந்துநீக்கும் நோக்கில் இஸ்லாமிய போராளிகள் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கியும், ஆயுதங்கள்வழங்கியும், ஆட்சிமாற்றத்திற்கான ஒரு பிரசாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளது. 2013 இல், அசாத்துக்கு எதிராக ஒரு முழு அளவிலான விமான போர் நடத்துவதற்கு போலிக்காரணமாக, சிரிய அரசாங்கம் இரசாயன ஆயுத தாக்குதல்கள் நடத்தியது என்ற ஜோடிக்கப்பட்ட வாதங்கள் பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டில் மக்கள் எதிர்ப்பை, இராணுவ ஸ்தாபகத்துக்குள் பிளவுகளை மற்றும் வாஷிங்டனின் நேட்டோ கூட்டாளிகளிடையே பலவீனமான ஆதரவை முகங்கொடுத்த ஜனாதிபதி ஒபாமா, கடைசி நிமிடத்தில் விமான தாக்குதலை இரத்து செய்தார்.

உளவுத்துறை ஸ்தாபகத்தின் செல்வாக்கான பிரிவுகளது பொதுவான ஆதரவைக் கொண்டிருந்த ஜனநாயகக் கட்சி வேட்பாளரின் எதிர்ப்பார்ப்பில் இருந்த தேர்தல் வெற்றிக்குப் பின்னர், சிரியாவில் ஒரு பாரிய அமெரிக்க இராணுவ தீவிரப்பாட்டைத் தொடங்குவதற்கு, ஹிலாரி கிளிண்டன் பிரசாரக் குழுவுக்கும் ஒபாமா நிர்வாகத்துக்கும் இடையே பேச்சுகள் நடந்துவந்தன மற்றும் திட்டங்கள்அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன என்பது சந்தேகத்துக்கிடமின்றி இருந்தது. அப்பிரசாரத்தின் போது, கிளிண்டன்மீண்டும் மீண்டும் ‘விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்ட’ மண்டலம் ஏற்படுத்தவும் மற்றும்சிரியாவில்செயற்பட்டுவந்த ரஷ்ய படைகளுடன் ஒரு நேரடியான இராணுவ மோதல் அபாயத்தை முன்னிறுத்தும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் அழைப்புவிடுத்து வந்தார்.

கிளிண்டன் வென்றிருந்தால், ஒருவேளை ஒபாமா நிர்வாகம் இந்நேரம் ஏற்கனவே சி.ஐ.ஏ. கோரிய போர் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருந்திருக்கக்கூடும்.


(There is little doubt that talks were underway between the Clinton campaign and the Obama administration, and planning was well advanced, for a massive US military escalation in Syria to be laun ched after the expe cted election victo ry of the Democ ratic candidate, who had the public sup port of domi nant sections of the inte lligence establish ment. During the campaign, Clinton repeatedly called for the imposition of a “no fly” zone and other measures that posed a direct risk of military conflict with Russian forces operating in Syria. Had Clinton won, it is likely that the Obama admini stration would already be impl ementing war plans demanded by the CIA.)




‘‘முதலிடதில் அமெரிக்கா’’ மந்திரம் (“America First” mantra)



அரசியல் ஸ்தாபகத்தை ஆச்சரியத்தில் மூழ்கடித்த ட்ரம்பின்



வெற்றி, இத்தகைய திட்டங்களைக் குழப்பத்துக்குள் வீசியது. இது, இராணுவ வாதம் மற்றும் போர் கொள்கைக்கு ட்ரம்ப் எந்தவிதத்திலும் குறை




வாகப் பொறுப்பேற்றவர் அல்லர் என்றாகாது. அவரது ‘முதலிடதில் அமெரிக்கா’ மந்திரம், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குச்சவால்விடுப்பவர்களாக கருதப்படும் அனைவருக்கும் எதிராக எந்தவொரு வழிவகையைக் கொண்டும் மற்றும் அனைத்து விதத்திலும் அதன் கடிவாளமற்ற வலியுறுத்தலுக்குத் திரும்புவதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. ஆனால், சீனாவை உடனடி எதிரியாகக் காண்கின்ற மற்றும் ரஷ்யாவுக்கு எதிரான உடனடி தீவிரப்பாடான நடவடிக்கையின் வரிசையிலிருந்து சீனாவை நீக்கிவிட்டு ஒரு கவனச் சிதறலாக இருக்குமெனக் கருதும் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்குள்ஒருகன்னைக்காக ட்ரம்ப் பேசுகிறார். (The election of Trump, which took the political establishment by surprise, threw these plans into disarray. This is not because Trump is any less committed to a policy of militarism and war. His “America First” mantra represents a turn to the unbridled assertion of American imperialist interests by any and all means against all perceived challengers. However, Trump speaks for a faction within the US ruling class and state that sees China as the more immediate enemy and deems an immediate escalation against Russia to be a distraction from the first order of business—taking on Beijing.)

**ரஷ்யா உடன் நல்லுறவுகளைக் கொண்டிருப்பது கெட்டதல்ல, நல்லதே என்று ட்வீட்**

முதல் நாளின் உளவுத்துறை விவரிப்புகளுக்காக சனியன்று சலித்துக் கொண்ட ட்ரம்ப், ரஷ்யா உடன் நல்லுறவுகளைக் கொண்டிருப்பது கெட்டதல்ல, நல்லதே, என்று ட்வீட் செய்து, ரஷ்ய ஊடுருவல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் மீதான அவர் வாதத்தை நடைமுறையளவில் மீள வலியுறுத்தினார். .(On Saturday, Trump shrugged off the previous day’s intelligence briefing and effectively reiterated his skepticism about the allegations of Russian hacking, tweeting, “Having a good relationship with Russia is a good thing, not a bad thing.”)

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




28


## விடுதலைப் போரின் விரிவாக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இறுதியான ஆதரவு தெரிவித்து ஈழத் தமிழரின் தேசிய போராட்ட அரங்கில் எம்.ஜி.ஆர். பிரவேசித்தமை ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்தது. தமிழக முதல்வரின் ஆசியுடனும் நிதி உதவியுடனும் பிரபாகரனது இலட்சியக் கனவுகள் நிஜமாக மாறின. 1984 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் துரிதமான வளர்ச்சியும் விரிவாக்கமும் கண்டு செம்மையாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு விடுதலைச் சக்தியாக உருவாக்கம் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதிகளில் புதிதாகப் பயிற்சிப் பாசறைகள் நிறுவப்பட்டன. பெரும் தொகையில் புதிய போராளிகள் இயக்கத்தில் இணைக்கப்பட்டனர். அவர்கள் தமிழகத்துக்குப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இந்தியப் பயிற்சி பெற்ற மூத்த தளபதிகள் பயிற்சியாளர்களாகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டனர். இந்த மூத்த தளபதிகளில் முக்கியமானவர் பொன்னம்மான் என்று அன்பாக அனைவராலும் அழைக்கப்பட்ட லெப். கேணல் அற்புதன். இவரது இயற்பெயர் யோகரெத்தினம் குகன். இவர் யோகரெத்தினம் யோகியின் சகோதரர். தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நெருங்கிய தோழர். விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் பல களங்களைக் கண்ட வீரர். தமிழக இராணுவப் பயிற்சி முகாம்களுக்குப் பிரதம பயிற்சியாளராகப் பணிபுரிந்த பொன்னம்மான், புலிப் போராளிகளின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். 1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள நாவற்குழியில் சிங்கள இராணுவ முகாம் ஒன்றைத் தாக்கி அழிக்கத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி பொன்னம்மான் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இராணுவக் கட்டமைப்பைக் கட்டி வளர்த்து விரிவாக்கம் செய்த அதே வேளை, பெரும் தொகையில் நிதி ஒதுக்கி அரசியல் பிரிவையும் விரிவுபடுத்தினார் பிரபாகரன். சென்னை அடையாறில் அரசியல் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டது. அரசியல் பிரிவுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட போராளிகளுக்கு அரசியல், சித்தாந்த வகுப்புகளை நடத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இயக்கத்தின் அதிகாரபூர்வ கொள்கை பரப்பு ஏடாக 'விடுதலைப்புலிகள்' மாதாந்த பத்திரிகையையும் 'Voice of Tigers' என்ற ஆங்கில இதழை யும் வெளியிட்டோம். Liberation Tigers and Tamil Eelam Freedom Struggle, Towards Liberation, Diary of combat என்ற ஆங்கிலப் பிரசுரங்களையும் அக்காலப் பகுதியில் எழுதி வெளியிட்டேன்.

தமிழகத்தில் எமது பயிற்சிப் பாசறைகளில் பயிற்சியை முடித்துக் கொண்டு புலிப் படை வீரர்கள் தமிழீழத் தாயகம் திரும்பியமையைத் தொடர்ந்து, சிங்கள ஆயுதப் படையினருக்கு எதிராக கெரில்லாப் போர் தீவிரமடைந்தது. 1984 ஆம் ஆண்டு ஆரம்பக் காலத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வன்னி மாநிலத்திலும், எமது போராளிகள் நன்கு திட்டமிடப்பட்ட கெரில்லாத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். அந்த வரலாற்றுக் கால கட்டத்தில், யாழ்குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர் எமது முதுபெரும் தளபதி கேணல் கிருஷ்ணகுமார் கிட்டு. இந்திய இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு தமிழீழம் திரும்பிய கேணல் கிட்டு, சிங்கள இராணுவத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் வகையில் திகைப் பூட்டும் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தினார். 1984 பெப்ரவரி 24ஆம் திகதி, கேணல் கிட்டுவின் தலைமையில் சென்ற புலிகளின் கெரில்லா அணி, யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் கோட்டையாக விளங்கிய குருநகர் இராணுவ முகாமுக்குள் ஊடுருவி, வெடிகுண்டுகள் வைத்து முகாமைத் தகர்த்தது. இக் குண்டு வெடிப்பால் இராணுவக் கட்டடங்கள் அனைத்தும் இடிந்து விழுந்து தரைமட்டமாகின. புதிய கட்டடங்களை நிறுவி, இம் முகாமை மேலும் பலப்படுத்தி விஸ்தரிக்க சிங்கள இராணுவத் தலைமை திட்ட மிட்டிருந்த வேளையில் இப் படை முகாமின் கட்டுமானம் நாசமாக்கப்பட்டது சிங்கள அரசுக்குத் திகிலைஏற்படுத்தியது. இதனையடுத்து இவ்வாண்டு காலத்தில் நிகழ்ந்த பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குகொண்ட கிட்டு, தனது அபாரமான திறமையாலும் துணிவாலும் சிங்கள இராணுவத்துக்கு சிம்மசொப்பனமாக விளக்கினான். 1984 ஏப்பரல் மாதம் 9 ஆம் நாள், பிற்பகல் 2 மணி அளவில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து சிங்கள இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நிகழ்த்தினர். இத்தாக்குதலில் ஓர் இராணுவ 'ட்ரக்' வண்டி முற்றாகச் சிதைக்கப்பட்டு பதினைந்து சிங்களப் படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்; இருபது பேர் வரை படுகாயமடைந்தனர். வீதியோரம், சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளுடன் வான் ஒன்றை நிறுத்தி வைத்து இராணுவ வாகனங்கள் அதனை கடந்து செல்லும்போது வெடிக்க வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. 1984 ஓகஸ்ட், செப்ரெம்பர் மாத காலத்தில் ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்து நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் சிங்களக் காவற்துறையினரும் கொல்லப்பட்டனர். கவச வண்டிகள் உட்பட பல இராணுவ வாகனங்கள் நாசமாக்கப்பட்டன. இக் காலப் பகுதியில், நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த காவல் நிலையங்கள் புலிப் போராளிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகின. தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக நிகழ்ந்த புலிகளின் கெரில்லாத் தாக்குதல்கள் காரணமாக சிங்கள ஆயுதப் படைகள் மத்தியில் திகிலும் குழப்பமும் மன முறிவும் ஏற்படத் தொடங்கியன. 1984 ஆம் ஆண்டு ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதப் காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல்கள் சிலவற்றை காலவரிசையின்படி இங்கு பதிவு செய்கிறேன்.





> அந்த வரலாற்றுக் கால கட்டத்தில், யாழ்குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர் எமது முதுபெரும் தளபதி கேணல் கிருஷ்ணகுமார் கிட்டு. இந்திய இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு தமிழீழம் திரும்பிய கேணல் கிட்டு, சிங்கள இராணுவத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் வகையில் திகைப்பூட்டும் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தினார். 1984 பெப்ரவரி 24ஆம் திகதி, கேணல் கிட்டுவின் தலைமையில் சென்ற புலிகளின் கெரில்லா அணி, யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் கோட்டையாக விளங்கிய குருநகர் இராணுவ முகாமுக்குள் ஊடுருவி, வெடிகுண்டுகள் வைத்து முகாமைத் தகர்த்தது.

**1984 ஓகஸ்ட் 4 ஆம் நாள்:** யாழ்ப்பாணக் குடாநாட்டில் பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள பொலிகண்டி எனப்படும் கரையோரக் கிராமத்தில் சுற்றுக்காவலில் சென்ற கடற்படை அணிக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் மத்தியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சமரில் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டனர்; மூவர் படுகாயம் அடைந்தனர்.

**ஓகஸ்ட் 5 ஆம் நாள்:** வல்வெட்டித்துறைக்கு அண்மையிலுள்ள நெடியகாடு என்னும் கிராமத்தில் சிங்களக் காவல்துறை அதிரடிப்படையினரின் தொடர் வாகன அணி விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதலுக்கு இலக்கானது. மூன்று கவச வாகனங்கள், ஒரு 'டிரக்', ஒரு 'ஜீப்' ஆகிய வாகன அணி விடுதலைப் புலிகளின் கண்ணி வெடிக்குள் சிக்கின. கண்ணி வெடியின் முழுத் தாக்கத்துக்கும் இலக் ான 'ஜீப்' வண்டி சுக்குநூறாகச் சிதறியது. இந்தத் தாக்குதலில் காவல்துறை உயர் அதிகாரி (ஏ.எஸ்.பி.) ஜெயரத்னா உட்பட ஒன்பது அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயம் அடைந்தனர்.

**ஓகஸ்ட் 5 ஆம் நாள்:** வன்னியில், ஒட்டுசுட்டான் எனப்படும் சிறு பட்டினத்தில் அமையப் பெற்றிருந்த காவல் நிலையம் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகியது. இத் தாக்குதலில் எட்டு சிங்களக் காவல்துறையினர் கொல்லப்பட ஏனையோர் சிதறியோடித் தப்பித்துக் கொண்டனர்.

**ஓகஸ்ட் 11 ஆம் நாள்:** மன்னார் மாவட்டத்தில் வெள்ளாம் குளத்துக்கு அண்மையில், மன்னார் – பூநகரி வீதியில் இராணுவ சுற்று அணி ஒன்று விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதலுக்கு ஆளானது. இத் தாக்குதலில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**ஓகஸ்ட் 14 ஆம் நாள்:** வல்வெட்டித் துறையில் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிக் கெரில்லாப் போராளிகள் துணிச்சலான திடீர் தாக்குதலை நிகழ்த்தினர். ஒரு மணி நேரம் வரை நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் பல காவல்துறையினரும் இராணுவத்தினரும் படுகாயமடைந்தனர்.

**ஓகஸ்ட் 24 ஆம் நாள்:** வடமராட்சியில் கரவெட்டி என்னுமிடத்தில், விடுதலைப்புலிப் போராளிகள் பதுங்கியிருந்து நிகழ்த்திய தாக்குதலில் இராணுவ வானகம் ஒன்று சிதறி எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதே நாளன்று, அச்சுவேலியில் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர்.

**செப்ரெம்பர் முதலாம் நாள்:** வடமராட்சி கரையோரக் கிராமமாகிய திக்கத்தில், காவல்துறை சுற்றுக் காவல் அணிமீது விடுதலைப்புலிக் கெரில்லா வீரர்கள் பதுங்கியிருந்து நிகழ்த்திய தாக்குதலில் இருபது அதிரடிப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

**செப்ரெம்பர் 10 ஆம் நாள்:** முல்லைத்தீவுப் பட்டினத்துக்கு சமீபமாகவுள்ள செம்மலை என்னுமிடத்தில் ஒரு வாகனத் தொடர் அணிமீது புலி வீரர்கள் மேற்கொண்ட துணிகர கெரில்லாத் தாக்குதலில் பதினைந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

(தொடரும்...)

# ஆயுர்வேத வைத்தியர்கள் 213 பேர் சேவையில் இணைக்க நடவடிக்கை

ஆயுர்வேத வைத்தியர்கள் 213 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் எல்.எச்.திலக்கரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இதுதொடர்பாக முன் வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ''எனவே, எதிர்வரும் மே மாதம் அளவில் இந்த ஆயுர்வேத வைத்தியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர். இந்த எண்ணிக்கையுடன் மொத்தமாக ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கையை 817 ஆக அதிகரிப்பதற்கான அனுமதி கோரிக்கை நிதி அமைச்சிடம் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் 107 ஆயுர்வேத வைத்தியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமையவே இந்த வைத்தியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். (எ)

# ஓட்டோக்களுக்கு புதிய விதிகள்; வர்த்தமானியில் விவரிப்பு!

## மீற்றர் கட்டாயம்; சாரதி ஆசனத்தில் பெயர் விவரங்கள்

கொழும்பு, ஜன.16

ஓட்டோக்கள் தொடர்பாக புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் அனைத்து ஓட்டோக்களிலும் மீற்றர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

அனைத்து ஓட்டோக்களிலும் சாரதி ஆசனத்துக்குப் பின்புறமாக வாகனத்தின் பதிவிலக்கம், சாரதியின் பெயர், சாரதியின் புகைப்படம் என்பன காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்தின் போது குறுகிய (அண்மித்த) வீதிகளினூடாகப் பயணிப்பதற்கு சாரதி கடமைப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் பற்றுச்சீட்டு வழங்குவது சாரதியின் பொறுப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வலது பக்கத்தால் உள்நுழைய முடியாமல் முற்றாக அல்லது பகுதி அளவு மூடிவைக்கப்படவேண்டும் என்று வர்த்தமானி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புகைத்தல் அதே போன்று குறுகிய பாதைகள் இருக்கும் போது பயணிகளின் அனுமதியின்றி நீண்ட தூரப் பாதைகளினூடாகச் செல்வதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயணிகளுடைய பொதிகள் அல்லது பொருள்கள் தவறுதலாக ஓட்டோவில் விட்டுச் செல்லப்பட்டிருந்தால், அதனை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பது சாரதியின் பொறுப்பு என்று வர்த்தமானி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 16.01.2017

துர்முகி வருஷம் தைமாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை சதுர்த்தி பகல் 11.15 வரை. பின்னர் பஞ்சமி - பூரம் இரவு 11.17 வரை பின் உத்தரம் சித்தம் முழுவதும் வரை. இராகு காலம் காலை 07.59 முதல் 09.26 வரை. சுபநேரம். பகல் 12.36 முதல் 02.06 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி : தைமாத தேய்பிறை பஞ்சமி.

"ஜோதிடமனி" பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

**மேஷம்:** இன்று நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். தொழில் முன்னேற்றம் அடையும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**ரிஷபம்:** இன்று கவலையான நாள். உறவினர், நண்பர்களுடன் பகைமை உண்டாகும். வியாபாரம் பெரிய நஷ்டமடையும். தொழில் விருத்தி குன்றும். தேக சுகம் பாதிப்படையும்.

**மிதுனம்:** இன்று விருத்தியான நாள். எண்ணிய கருமங்கள் வெற்றியடையும். வியாபாரம் நன்கு விருத்தி அடையும். சுயதொழிலில் சிலர் விருத்தி அடைவார்கள்.

**கடகம்** : இன்று உயர்வான நாள். குடும்ப உறவு குதூகலமாக இருக்கும். செய்யும் தொழில் முன்னேற்றம் அடையும். உத்தியோக உயர்ச்சிகள் கிடைக்கும். நண்பர்கள் பக்க பலமாக இருப்பார்கள்.

**சிம்மம்** : இன்று சுபீட்சமான நாள். பணம் பலவழிகளாலும் வந்துசேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி மலரும். ஆடை, ஆபணரச் சேர்க்கை உண்டாகும். பெண்களுக்கு விரும்பிய மணவாழ்ககை அமையும்.

**கன்னி:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். சிலர் அரசாங்க வேலைதேடி அலைவார்கள். உடலாரோக்கியம் குறைவடைவதால் மருத்துவரின் உதவியை நாடுவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**துலாம்:** இன்று அதிஷ்டமான நாள் . பணபலம் மனபலம் அதிகரிக்கும். எண்ணியவை கைகூடும். வெளிநாடுசெல்ல எடுத்த முயற்சி அனுகூலமாகும். பூர்வீக சொத்துகள் வந்து சேரும். உறவினர், நண்பர்கள் ஒத்துழைப்பார்கள்.

**விருச்சிகம்:** இன்று யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். செய்யும் தொழில் விருத்தியடையும். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

**தனுசு:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் மத்திய லாபம் கிடைக்கும். உத்தியோக உயர்வுகள் தடை, தாமதமாகும்.

**மகரம்:** இன்று கவலையான நாள் ஆகும். பொருளாதாரம் நலிவடையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் குறையும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகம் காட்டுவார்கள்.

**கும்பம்:** இன்று மத்தி பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அளவுக்கதிகமாகும். எடுக்கும் காரியங்கள் தாமதப்படும். வைத்தியச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கல்களைத் தவிர்க்கவும்.

**மீனம்:** இன்று ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. நிதிநிலைமை வளமாக இருக்கும். உத்தியோகத்தர் திறமையால் உயர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊதிய உயர்வையும் பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்; உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதங்கள் இந்நட்சத்திரத்தில் பிறந்தோர் நற்கருமம், பிரயாணம் என்பனவற்றை இத்தினத்தில் தவிர்க்கவும்.

# அரசுக்கு வறட்சி காரணமாக ரூ.15 ஆயிரம் கோடி மேலதிக செலவு

கொழும்பு, ஜன.16

நாட்டில் நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக அரசுக்கு ரூ.150 ஆயிரம் கோடி ரூபா மேலதிக செலவுகள் ஏற்பட்டுள் ளன என புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் ரஞ்சித்சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எந்தவிதத் தடைகள் வந்தாலும் அதற்காக சரியான தயார் நிலையில் அரசு இருப்பதாகவும், இதற்காக மக்களின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கிடையில், வறட்சி காரணமாக நாடு முழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களின் விளைச்சலை மீட்டெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அந்த வயல் நிலங்களின் விளைச்சலை மீட்டெடுப்பதற்கு முடிந்தளவு முயற்சி மேற்கொள்ளப்படும் என்று அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சமன் வீரசிங்க கூறினார்.


இதுதவிர, வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி தொடர்பான சவாலான நிலை தோன்றியுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன கூறியுள்ளார். (எ)



யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வுகள். (எ-21)

# ஆளும்கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை இல்லை!

## பந்துல எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.16

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட, ஈடுபடும் ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பலர் தற்போதைய அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெலிக்கடை சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவைச் சந்திப்பதற்காக மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர்.

அரசியல் நோக்கில் பழி வாங்குவதற்காக அரசு, மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

# சாலாவ ஆயுதக் களஞ்சிய வெடிப்பு; பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

கொழும்பு, ஜன.16

சாலாவ ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களுக்கு கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதன் பொருட்டு சுமார் ஆயிரத்து 329 மில்லியன் ரூபா நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன்படி, 90 சதவீதமானவர்களுக்கு ஆயிரத்து 41 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கி முடிவுறுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ். மியனவல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும் சேத விவரங்களைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே எஞ்சியவர்களுக்கு நஷ்டஈடு வழங்க முடியாமற்போனது என அவர் தெரிவித்தார்.

எனினும், அவற்றை எதிர்வரும் மாத இறுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஆயுதக் களஞ்சிய வெடிப்பால் பாதிக்கப்பட்ட சில வர்த்தக நிலையங்களையும், குடிமனைகளையும் மீளமைக்கும் பணிகளும் தற்போது இடம் பெற்று வருகின்றன. (எ)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க அடியோடு மறுத்தது ஐ.தே.கட்சியே!

## கவலை தெரிவிக்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஜன.16

நமது பதவிக் காலத்தை, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக 2000ஆம் ஆண்டில் தாம் முயற்சிக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரவையின் பேச்சாளர், அமைச்சர் ராஜித சேனாரத்ன, தெரிவித்த தகவலை அவர் மறுத்து உரைத்திருக்கிறார்.

கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு முன்னாள் அமைச்சர் ஒருவர் தமக்குத் தெரியாமல் செயற்பட்டு, பதவிக் காலத்தை நீடிக்க முயன்றார் என்றும் முன்னாள் ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று எனது திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் அவ் வேளை அடியோடு ஏற்க மறுத்தனர்.



அந்த விவகாரத்தை, ஆணைக்குழுவின் செயலாளரான கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்ன, தாம் வெளியிட்டுள்ள நூலில், மிக விரிவாக எடுத்துரைத்துள்ளார் என்றும் சந்திரிகா குமாரதுங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவரான ராஜித சேனாரத்ன தமது நிலைப்பாட்டை, நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதனை, சரிவரப் புரிந்து கொள்ளாமல் உள்ளார் என்பது தொடர்பாகக் கவலை அடைகின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார். (அ)

# பொருத்து வீடுகளை பெற தீவக மக்கள் ஆர்வம்

மண்டைதீவு, ஜன.16

மண்டைதீவு மற்றும் தீவகப் பகுதிகளில் பொருத்து வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு தீவக மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

பொருத்து வீடுகள் தொடர்பாக அரசியல் கருத்துக்கள் முரணாக இருந்து வருகின்றபோதும் தீவகத்தில் மக்கள் இது விடயத்தில் கரிசனை கொண்டுள்ளனர்.

குறிப்பாக, மண்டைதீவு கிராம அலுவலர்களுக்கான பணிமனைகளில் படிவங்களைப் பெறுவதற்கும் நிரப்பிக் கொடுப்பதற்கும் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் வருகை தந்திருந்தனர்.

மூன்று விண்ணப்பப் பிரதிகளைப் பூர்த்தி செய்து, கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தி, அவர் ஊடாக பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பகுதிக்கு அனுப்ப வேண்டும் என்றும் -

அத்துடன், வீடு கட்டுவதற்கு (பொருத்துவதற்கு) உரிய காணியின் உறுதியின் நிழற்பிரதியும் குடும்பப் பதிவு அட்டையின் பிரதி ஒன்றும் இணைக்கப்படல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-20)

# கொடிகாமம் நகரில் சோடியம் பல்புகள்

கொடிகாமம், ஜன.16

கொடிகாமம் நகரில் சோடியம் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நகரின் மையப் பகுதி மற்றும் பிரதான வீதி, பஸ் தரிப்பு நிலையங்கள், ரயில் நிலையப் பகுதி ஆகிய முக்கிய இடங்களில் இந்த விளக்குகள் பிரதேச சபையால் பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது இரவு வேளையில் கொடி காமம் நகரப் பகுதி புதுப் பொலிவுடன் காணப்படுகின்றது.

இதேவேளை, மீசாலை புத்தூர்ச் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரை ஏ9 பிரதான வீதியில் பொதுமக்களின் நன்மை கருதி சாவகச்சேரி பிரதேசசபையால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நகர சபை எல்லைக்குட்பட்ட நுணாவில் சந்தியிலிருந்து மீசாலை புத்தூர்ச் சந்தி வரை ஏ9 பிரதான வீதிகளில் ஏற்கனவே வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-22)

# குளங்களில் இருந்து வயலுக்கு நீர்; கால்நடைகள் பாதிக்கும் நிலைமை

யாழ்ப்பாணம், ஜன.16

வயல் வெளிகளில் உள்ள குளங்களிலிருந்து நெல் வயல்களுக்கு விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீரைத் தொடர்ச்சியாக இறைப்பதால் குளங்களிலும் வாய்க்காலிலும் நீர் மட்டம் வற்றி வருகின்றது.

அத்துடன், தண்ணீர் ஊற்று இல்லாது காய்ந்துவருகிறது. இதனால் அடுத்து வரும் மாதங்களில் கால்நடைகளுக்கு குடிப்பதற்கு பெரிய அளவில் நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தொடர்பாகக் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் ஒரு குளத்திலிருந்து இரண்டு, மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு இறைத்து வருகின்றனர்.

இதனால் எதிர்வரும் மாதங்களில் கால்நடைகள் நீருக்கு அலையும் அபாய நிலை ஏற்படும் என்று கால் நடைகளை வைத்திருப்போர் எச்சரிக்கின்றனர்.

அதேவேளை, குளங்களில் நிறைந்து அழகாகக் காணப்படும் தாமரை இலைகள், தாமரைப் பூக்கள் நிலத்துடன் சேர்ந்து காய்ந்து வருகின்றமையையும் காணக்கூடிய தாகவுள்ளது. (இ-22)

# இயக்கச்சி கடற்களப்புடன் இணைந்த காட்டுப்பகுதி சிலரால் அழிப்பு

## எவர் கண்ணிலும்படாதது குறித்து கவலை

யாழ்ப்பாணம், ஜன.16

இயக்கச்சியின் கிழக்கில் உள்ள கடற்களப்புப் பகுதியோடு இணைந்த காடு இனந்தெரியாத வர்களால் அழிக்கப்பட்டு வருவது குறித்து நலன் விரும்பிகள் மற்றும் சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் ஆதிக் குடிகளில் ஒன்றான இயக்கர்கள் வாழ்ந்தனர் என வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படும் இயக்கச்சிப் பகுதி காடும் பனங் கூடல்களும் வயல் நிலமும் கடலும்களப்பும் வெளியும் குளங்கள் போன்ற சிறிய நீர்ப் பரப்பையும் கொண்ட இயற்கை வளமும் அழகும் நிறைந்த பகுதியாகும்.

யாழ். குடாவின் நுழைவாயில் அல்லது வெளி வாயிலாக உள்ள இந்தப் பகுதியே யாழ்ப்பாணத் துக்கான இயற்கை வளப் பகுதியாகும். அண்மையில் இங்குள்ள பறவைகள் சரணாலயத்தை இலங்கை அரசு இயற்கைப் பூங்காவாகப் பிரகடனப்படுத்தியுள்ள நிலையிலும் வடக்கு மாகாண சபை, பிரதேச செயலகம், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், சுற்றுச் சூழல்துறை என அரச திணைக்களங்கள் இருக்கும் நிலையிலும் காடு அழிக்கப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக எவரும் கண்டு கொள்ளவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். (இ-32)

# இன்றும் நாளையும் ஏற்படும் மின்தடை

இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் ஏற்படும் மின்சாரத் தடை தொடர்பான விவரங்களை மின்சார சபையின் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி, இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6.30 மணி வரை வவுனியா நகரிலும் மன்னார் பிரதேசத்தில் எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திட்டம், கொன்னையன் குடியிருப்பு ஆகிய இடங்களிலும்-

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தைமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும்-

கிளிநொச்சி பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், இரணைப்பாலை, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தவிபுரம், தேராவில், 68 ஆவது பிரிவு இராணுவ முகாம், ஹைட்ராமணி ஆடைத் தொழிற்சாலை, 18 வி.ஐ.ஆர் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் மற்றும் மன்னார் பிரதேசத்தில் தலைமன்னார், படப்பாடி, பேசாலை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பொங்கல் விழா

நெல்லியடி, ஜன.16

பருத்தித்துறை கோட்டமட்ட பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் அதிபர் எஸ்.சிறீநடராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், வடமாகாணசபை உறுப்பினர் கே.தர்மலிங்கம் பிரதம விருந்தினராகவும், கோட்டக் கல்வி அதிகாரி எம். நவநீதமணி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-32)

# ஆண், பெண் ஆசிரிய பயிலுநர்களின் மரதன் ஓட்டம்





யாழ்ப்பாணம், ஜன.16

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் 2017ஆம் ஆண்டுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

காலை 6 மணிக்கு ஆரம்பமாகிய மரதன் ஓட்டப்போட்டிகள் ஆண் ஆசிரிய பயிலுநர்களுக்கு வேறாகவும், பெண் ஆசிரியபயிலுநர்களுக்குவேறாகவும் நடைபெற்றன.

ஆண்கள் கலாசாலையில் இருந்து புறப்பட்டு இராச வீதி வழியாக நல்லூர் வரை சென்று அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக மீண்டும் கலாசாலையை வந்தடைந்தனர்.

பெண்கள் கலாசாலையிலிருந்து தமது ஓட்டத்தை ஆரம்பித்து இருபாலை, கோண்டாவில் வீதி வழியாக இராசவீதியை அடைந்து இராமசாமிப் பரியாரியார் வீட்டுச் சந்தி வழியாக கல்வியங்காட்டை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக மீண்டும் கலாசாலையை அடைந்தனர். இந்த ஓட்டப் போட்டியில் 124 ஆண் போட்டியாளர்களும், 250 இற்கும் மேற்பட்ட பெண் போட்டியாளர்களும் கலந்து கொண்டனர். மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் விரிவுரையாளர் பா.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் வீ.கருணலிங்கம் மற்றும் முன்னாள் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆகியோர் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கு பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தனர். (இ-32-21)

# மாநில நெடுஞ்சாலைகளிலுள்ள மதுசாலைகளை அகற்ற முடியாது

## உச்ச நீதிமன்றம் அதிரடியாக அறிவிப்பு

இந்தியாவின் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுபானக் கடைகளை அகற்றும் உத்தரவை மாற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மதுபானக் கடைகள் விபத்துக்கள் அதிகமாக ஏற்படக் காரணமாக உள்ளன எனத் தெரிவித்து அண்மையில் இந்தியா முழுவதும்தேசியநெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள மதுபானக் கடைகளை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்குள் அகற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கோரி மதுபான வியாபாரிகள் சங்கம் சார்பில் உச்சநீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு விசாரணைக்குவந்துள்ளபோதே நீதிபதிகள் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவில் மாற்றம் செய்ய முடியாது என்றும் அந்த உத்தரவைச் செயற்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளனர். (எ)

# கங்கை நதியில் படகு மூழ்கி குழந்தைகள் உட்பட 24 பேர் சாவு

## பீகாரில் பெருந் துயரச் சம்பவம்



பாடனா, ஜன.16

பீகார் தலைநகர் பாட்னாவில் உள்ள கங்கை நதியில் நேற்றுமுன் தினம் இரவு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் 24 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவ்வாறு விபத்துக்குள்ளான படகில் சுமார் 40 பேர் பயணம் செய்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பீகார் மாநிலத்தில் மகரசங்கிராந்தி விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில் இந்த விபத்து மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்திஉள்ளது.

மாநில அரசின் சுற்றுலாத்துறை சார்பில் மகரசங்கிராந்தி பண்டிகையைப் முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருவிழாவுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து, தேசிய பேரிடர் மீட்புப் படையினர் விரைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.


மீட்கப்பட்டவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தநிலையில், பீகார் படகு விபத்தில் மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தங்களது ஆழ்ந்த இரங்கலை டுவிட் டர் செய்தி வழியாகத் தெரிவித்துள்ளனர். (எ)

# ஜல்லிக்கட்டு நடைபெற்றால் தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி

## சுப்பிரமணியன் சுவாமி எச்சரிக்கை



சென்னை, ஜன.16

ஜல்லிக்கட்டு நடைபெற்றால் தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வர வேண்டும்.

இதுதான் நடக்கும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுப்பிரமணியன் சுவாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

''உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முன் தமிழகத்தில் தடையை மீறி ஜல்லிக்கட்டு நடைபெற்றால், சட்டத்தைக் காக்கத் தமிழக அரசு தவறிவிட்டது என்று அர்த்தம்.

அந்தச் சூழ்நிலையில் அங்கு ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வர வேண்டும்.-என்றுள்ளது.

இதேவேளை, தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்ற சூழல் தகித்து வரும் நிலையில், இந்தக் கருத்து கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# ஜம்முகாஷ்மீரில் பெருமளவு ஆயுதங்கள் பறிமுதல்

ஜம்மு, ஜன.16

இந்தியாவின் எல்லைக்கு உட்பட்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளில்துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் பெருமளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 56 ஏ.கே ரக துப்பாக்கிகள், இரண்டு கிரனேட் ரக வெடிகுண்டுகள், 29 எம்.எம். கைத்துப்பாக்கிகள் உள்ளிட்டவை அடங்குகின்றன. (எ)

# நிலக்கரிச் சுரங்கம் இடிந்தது; 4 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

கொல்கத்தா, ஜன.16

மேற்குவங்க மாநிலம் பங்குரா மாவட்டத்தின் மெஹியா பிளாக்கில் உள்ள கலிகப்பூர் கிராமத்தில் நிலக்கரிச் சுரங்கம்ஒன்றுஇடிந்துவிழுந்து விபத்து ஏற்பட்டது.இந்த விபத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் பலர் மண் சரிவில் சிக்கி மாயமாகி உள்ளனர்.

அந்த நிலக்கரிச் சுரங்கத்தில் ஜார்காண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர்களில் பலர் பணிபுரிந்துள்ளனர். இந்தநிலையில், விபத்துக்குள்ளான சுரங்கம் சட்டத்துக்குப் புறம்பாக இயங்கிவந்தது என அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சுரங்கம் சட்டத்துக்குப் புறம்பானது என்பதால் அதற்குள் செல்ல விடாமல் அதன் நிர்வாகிகள் மற்றும் மாபியா கும்பல்கள் தடுத்து வந்தன என்று அவர்கள் கூறினர்.

அதேபோல், திரிணாமூல் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புடைய மாபியா கும்பல்களின் கட்டுப்பாட்டில் உள்ள அந்தப் பகுதியில் இது வரை விசாரணை ஏதும் நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது. விபத்து நடை பெற்ற இடத்துக்கு நேற்று முன்தினம் இரவு வரை பொலிஸ் அதிகாரிகள் யாரும் வரவில்லை என்று கூறப்படுகிறது.(எ)

# த்ரிஷாவின் டுவிட்டர் பக்கம் முடக்கம்

சென்னை, ஜன.16

நடிகை த்ரிஷாவின் டுவிட்டர் பக்கம் அடையாளம் தெரியாத நபர்களால் முடக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பீட்டா அமைப்பின் ஆதரவாளரான நடிகை த்ரிஷா, ஜல்லிக்கட்டு விவகாரத்தில் தெரிவித்திருந்த கருத்துக்களால் அவருக்கு ஆதரவும் எதிர்ப்பும் இருந்து வந்தன. சிவகங்கை அருகே நடைபெற்றுவந்த அவரது திரைப் படப்பிடிப்புக்கூட தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில், தனது டுவிட்டர்கணக்கை அடையாளம்தெரியாத நபர்முடக்கி விட்டார் என த்ரிஷா தெரிவித்துள்ளார். (எ)

# மீண்டும் சர்ச்சையில் அமேஸான் இணையம்



டில்லி, ஜன.16

இந்தியத் தேசியக் கொடி நிறத்தில் மிதியடிகள் விற்பனை செய்து சர்ச்சையில் சிக்கிய அமேஸான் நிறுவனத்தின் அமெ ரிக்க இணையத்தளத்தில் மகாத்மாகாந்தியின் படத்துடன் கூடிய செருப்புக்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமேஸான் நிறுவனம் இணையவழியாகப் பல்வேறு பொருள்கள் விற்பனை செய்யும் இணையத் தளங்களை நடத்தி வருகிறது. இந்த நிறுவனத்தின் அமெரிக்க பிரிவு இணையத் தளத்தில் மகாத்மா காந்தியின் புகைப்படம் பொறிக்கப்பட்ட மிதியடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ள சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தச் சம்பவமானது இந்தியர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை உண்டாக்கி உள்ளது.

உலகிலுள்ள இந்தியர்கள் அமேஸானுக்கு எதிராக சமூக வலைத் தளங்களில் தங்களது கண்டனத்தைப் பதிவிட்டுள்ளனர். பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரில் இந்தியப் பயனாளர்கள் இந்த விவகாரத்தைப் பிரதமர் மோடி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகிய இருவரின் டுவிட்டர் கணக்குகளுக்கு 'டேக்' செய்து தெரியப்படுத்தி உள்ளனர்.

சர்ச்சைக்குரிய இந்த விவகாரம் தொடர்பாக இந்திய அரசு தரப்பில் இருந்து நேரடியான கருத்து எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை, கடந்த வாரம் இந்திய தேசியக் கொடி உருவம் பாதிக்கப்பட்ட மிதியடிகள் அமேஸான் நிறுவனத்தின் கனடா பிரிவு இணையத்தளத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டமையும், சுஷ்மா ஸ்வராஜின் கடும் கண்டனத்துக்குப் பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# கண்ணிகளை கண்டறிந்து அழிக்கும் 'குட்டி' விமானம்

## குஜராத் மாணவன் கண்டுபிடித்தார்



கண்ணிவெடிகளைக் கண்டறிந்து அழிக்கும் குட்டி விமானத்தை, குஜராத்தைச் சேர்ந்த 14 வயது மாணவர் ஒருவர் உருவாக்கியுள்ளார்.


குஜராத்தைச் சேர்ந்த ஹர்ஷவர்தன் ஜாலா (வயது 14) என்ற சிறுவனே இவ்வாறு விமானத்தை உருவாக்கி உள்ளார்.

கண்ணிவெடியில் சிக்கி ஒவ்வோர் ஆண்டும் அதிக இராணுவ வீரர்கள் உயிரிழக்கின்றனர். அத்துடன், கால்களையும் இழக்கின்றனர் என்று கூறிய அந்தச் சிறுவன் அதற்குத் தீர்வு காணும் வகையில் இந்தக் குட்டி விமானத்தை உருவாக்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விமானத்தை இன்னும் மேம்படுத்திப் பயன்படுத்துவது தொடர்பாக, ஹர்ஷவர்தன் ஜாலாவுக்கு குஜராத் மாநில அரசு 5கோடி ரூபா மதிப்பிலான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

இந்த விமானம் நிலத்துக்கு மேல் 2 அடி உயரத்தில் பறந்து கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்கும். விமானத்துக்குள்ளிருக்கும்டெட்டனேட்டர், கண்ணி வெடி இருக்கும் இடத்தின் மீது விழுந்து அதை வெடிக்கவைத்து அழிக்கும் என்று ஹர்ஷவர்தன் ஜாலா தெரிவித்துள்ளார். (எ)

## சீனாவில் 19 கார்கள் மோதின! 6 பேர் சாவு; 15 பேர் காயம்!!



பீஜிங், ஜன.16

சீனாவில் 19 கார்கள் ஒன்றோடு ஒன்றாக மோதி விபத்துக்குள்ளாகியமை யால் 6 பேர் உயிரிழந் தனர்; 15 பேர் காயம் அடைந்தனர்.

சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள குயாங் டாங் மாகாணத்தையும் வடக்குப் பகுதியில் உள்ள ஹுனான் மாகாணத்தை யும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை குயாங் டாங் மாகாணத்தில் உள்ள குயிங்யுயான் நகரம் வழி யாகச் செல்கிறது.

குயிங்யுயான் நகரம் நெடுஞ்சாலையில் வேக மாகச் சென்று கொண்டி ருந்த கார்கள் திடீரென ஒன்றுக்கொன்று பயங் கரமாக மோதிக் கொண் டன. இவ்வாறு 19 கார் கள் மோதிக் கொண்ட மையில் 7 கார்கள் தீப்பி டித்து எரிந்தன.

இதில் 6 பேர் பரிதாப மாக உயிரிழந்தனர் 15 பேர் காயம் அடைந்தனர். மீட்புப் படையினர் சம் பவ இடத்துக்கு விரைந்து போக்குவரத்தைச் சரி செய்யும் பணியில் ஈடு பட்டனர். (எ)

# லிபியக் கடலில் மூழ்கியது அகதிகள் சென்ற படகு!

## 100 பேர் வரையில் பலி?



ரோம், ஜன.16

லிபியாவில் படகு கடலில் மூழ்கி 100 இற் கும் மேற்பட்டோர் பலி யாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. எனி னும் அவர்கள் எந்த நாடு களைச் சேர்ந்தவர்கள் என்று இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை.

ஆசிய நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் பலர் அகதிகளாகத் தஞ் சம் அடைந்து வருகின் றனர்.

நிலப்பகுதி வழியாகச் செல்பவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு வருகின் றனர்.

எனவே, தற்போது கடல் வழியாகச் சட்ட விரோதமாகப் படகுகளில் சென்று நுழைவது அதி கரித்து வருகிறது. அவ் வாறு செல்பவர்கள் உயி ரைப் பணயம் வைத்து பயணம் செய்கின்றனர்.

இந்நிலையில், லிபி யாவில் இருந்து இத்தா லிக்கு அகதிகள் படகு ஒன்று மத்தியதரைக் கட லில் நேற்றுச் சென்று கொண்டிருந்தது. லிபி யாவுக்கும், இத்தாலிக்கும் இடையே 50 கி.மீ. தூரத் தில் சென்றபோது படகு கடலில் மூழ்கியது.

தகவல் அறிந்ததும் பிரான்ஸ் கடற்படைக் கப்பலும், 2 வர்த்தகக் கப்பல்களும், விமானங் களும் மீட்புப் பணியில் ஈடுபட்டன. இந்நிலை யில் 4 பேரை மட்டுமே மீட்க முடிந்தது. 8 பேர் சடலமாக மீட்கப்பட்ட னர். படகில் ஏராளமான வர்கள் பயணம் செய்த னர்.

எனவே, 100 இற்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கி பலியாகி இருக்க லாம் என்று அஞ்சப்படு கிறது. அவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர் கள் என்று தெரியவில்லை.

இதற்கிடையே நேற்று முன்தினம் மத்திய தரைக் கடலில் படகுகளில் பய ணம் செய்த 550 அகதி கள் மீட்கப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின் றன. (எ)

## பிரேசில் சிறைச்சாலையில் கலவரம்; கைதிகள் 10 பேரின் தலை துண்டிப்பு!


ரியோடிஜெனிரோ, ஜன.16

பிரேசில் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 10 கைதிகள் தலை துண் டித்து படுகொலை செய் யப்பட்டனர்.

பிரேசில் நாட்டின் வட கிழக்கில் நடால் நகரம் உள்ளது. அங்கு அல்காகஷ் என்ற மிகப் பெரிய சிறைச்சாலை உள் ளது. அங்கு அதிகமான கைதிகள் அடைக்கப்பட் டுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அங்கு அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் வெடிகுண்டு கள் வீசியும், துப்பாக்கி யால் சுட்டும் தாக்கிக் கொண்டனர். இதனால் அங்கு கலவரம் மூண்டது.

இந்தத் தகவல் அறிந் ததும் சிறைக்காவலர் களும், பொலிஸாரும் விரைந்து சென்று கலவ ரத்தை அடக்கினார்கள். அதில் 10 கைதிகள் உயிரிழந்தனர். அவர்க ளில் பெரும்பாலானோர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலமாகக் கிடந்தனர். எனினும், கைதி கள் யாரும் தப்பி ஓட வில்லை என்று பொலி ஸார் தெரிவித்தனர். (எ)



பாகிஸ்தான் நாட்டை ஒட்டியுள்ள அரபியக் கடற்பகுதியில் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குவாடார் சரக்குத் துறைமுகத்தைப் பாதுகாக்க பாகிஸ் தானுக்கு 2 அதிநவீன ரோந்துக் கப்பல்களை சீனா வழங்கியுள்ளது. இந்தத் துறைமுகத்தை மையமாக வைத்து வளைகுடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்கா, ஐரோப்பாக் கண்டம் வழியாக வர்த்தகம் செய்யத் திட்டமிட்டுள்ள சீனா, அங்குள்ள கடல் பகுதியை சிறப்பு வர்த்தக மண்டலமாக அறிவித்து, பாதுகாத்து வருகிறது.

## சிரியாவில் ஐ.எஸ். தாக்குதல்

### 30 பேர் உயிரிழப்பு

டமாஸ்கஸ், ஜன.16

சிரியாவின் கிழக்கு பகுதியில் ஐ.எஸ். தீவிர வாதிகள் நேற்று கடுமை யான வான்வெளித் தாக் குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

சிரிய ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரச ஆதரவு படைகளைச் சேர்ந்த 12 பேர் இந்தத் தாக்குதலில் கொல்லப் பட்டனர் என்று சிரிய மனித உரிமைகள் கண் காணிப்பு மையத் தரப் பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அரச கட்டுப்பாட்டில் உள்ள டேயிர் எஸ்ஸோர் நகரில் நடத்தப்பட்ட இந் தத் தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தரப்பிலும் 20 பேர் கொல்லப்பட்ட னர். பொதுமக்கள் இரண்டு பேரும் உயிரிழந்தனர்.

டேயிர் எஸ்ஸோர் நக ரில் சுமார் 2 லட்சம் மக்கள் வசித்து வருகின் றனர். 2015 ஆம் ஆண்டு முதல் இந்த நகரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப் பாட்டில் இருந்து வரு கின்றமை குறிப்பிடத் தக்கது. (எ)

# இஸ்ரேல்-பலஸ்தீனம் மீண்டும் சமாதானப் பேச்சு

பரிஸ், ஜன.16

முறிவடைந்துள்ள இஸ்ரேல் - பலஸ் தீன சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தால் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் இதற்கான பேச்சு இடம்பெறுகின்றது. இந்தப் பேச்சில் 70 உலக நாடுகளின் பிரதிநிதிகள் பங்குகொள்கின்றனர். அவர்கள் பலஸ் தீன பிரச்சினைகளுக்கு இரண்டு நாடுகளின் தீர்வுகளை ஏற்றுள்ளனர்.

இந்தச் சமாதானப் பேச்சை பலஸ் தீனம் வரவேற்றுள்ள அதேவேளை, இது தமக்கு எதிராக சர்வதேச சக்திகள் ஒன்றிணைவு என்று இஸ்ரேல் குறிப் பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தப் பேச்சில் பலஸ்தீனத்தினதோ அல்லது இஸ் ரேலினதோ பிரதிநிதிகள் எவரும் பங்கு கொள்ளவில்லை.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கு மான நேரடி சமாதானப் பேச்சு 2014 ஆம் ஆண்டு முறிவடைந்தமை குறிப்பிடத் தக்கது. (எ)

## சீன ஊடகங்கள் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

தென் சீனக் கடற் பரப்பு விவகாரம் தொடர் பில் சீன ஊடகங்கள் அமெரிக்காவுக்கு எச்ச ரிக்கை விடுத்துள்ளன.

தீவுகளுக்குப் பிரவேசிப் பது தொடர்பில் எழுந் துள்ள சர்ச்சையே இதற் கான காரணம்.

தென் சீனக் கடற்பரப் பில் காணப்படும் தீவு களுக்கு சீனா பிரவே சிக்க இடமளிக்கக் கூடாது என்று அமெரிக்க ராஜாங் கச் செயலாளராக நியமிக் கப்பட உள்ள ரெக்ஸ் ரில் லர்ஸன் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கு சீனாவின் தேசிய ஊட கங்கள் கடும் எதிர்ப்பை யும் விமர்சனத்தையும் வெளியிட்டுள்ளன. முரண் பாடுகளை வலுக்கச் செய் யும் வகையில் செயற் படக் கூடாது என சீனா கோரியுள்ளது. (எ)

# பிரிட்டனில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குற்றவாளிகள் நாடு கடத்தப்படும் நிலை!

லண்டன், ஜன.16

பிரிட்டனில் 2 ஆயிரத்துக் கும் மேற்பட்ட குற்றவாளிகள் நாடு கடத்தப்படும் நிலையில் இருக்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பிரிட்டனுக்குச் சென்று குடி யேறிய அவர்கள், பல்வேறு குற்றங்களைப் புரிந்துள்ளனர்.

சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற் பட்ட நபர்கள் சிறைத் தண் டனை முடிந்த பின்னரும் கூட பிரிட்டனில் வசித்து வருகின்ற னர்.

ஐந்து வருடங்களுக்கும் மேலாக வசித்துவரும் அவர் களால் பொதுமக்களுக்கு அச் சுறுத்தல் எழலாம் என்று எச் சரிக்கும் தேசிய பாதிக் கப்பட்டவர்கள் கழகத்தைச் சேர்ந்த ஹைன்ஸ் உள்துறை அமைச்சகத்தைக் கடுமையா கச் சாடியுள்ளார்.

மேலும் இவ்வாறான குற்ற வாளிகள் சிறைத் தண்டனை முடிந்துவெளியேவரும் போதே சொந்தத் தாய் நாட்டுக்கு நாடு கடத்தவேண்டும் என்றும் கூறி உள்ளார்.

எனினும் குற்றவாளி களின் உடல்நலப் பிரச்சினைகள், தாய் நாடுகளில் நிலவும் அசாதாரண சூழல், அகதிக் கோரிக்கை, நாடு கடத்துவதற்கு எதிரான வழக்கு உட்படப் பல பிரச்சினைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், பிரிட்டனுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நபர்களை உடன டியாக அவர்களது சொந்தத் தாய் நாட்டுக்கே திருப்பி அனுப்புகிறோம். கடந்தாண் டில் மட்டும் 5 ஆயிரத்து 800 பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (எ)




யாழ். கொக்குவில் பிறவுண் வீதியிலுள்ள பல்கலைக் கழக கல்லூரியில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வுகள். (ஐ-21)



முல்லைத்தீவு இரணைப் பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தின் கால் கோள் விழா பாடசாலை யின் முதல்வர் இ.நேவிற் சீவராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டனர். (ஐ)




சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தினரால் சனசமூக நிலைய முன்றிலில் நடத்தப்பட்ட பொங்கல் நிகழ்வுகள். (ஐ-21)





புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள இரண்டு இயங்கு நிலை கலாமன் றங்களுக்கு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் ஊடாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் இந்த இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. கோம்பாவில் கொண்டலடி சித்திவிநாயகர் கலா மன்றத்துக்கும் மந்துவில் கவிதாலயா கலா மன்றத்துக்கும் தலா ஐம்ப தாயிரம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகள் வழங்கப்பட்டன.

இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. (ஐ)



யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் தைப்பொங்கல் விழா யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் மேலதிக அரச அதிபர் ப.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ-54)



மக்களுக்கு குறைந்த விலையில், தரமான பொருள்களை விநியோகிக்கும் பொருட்டு 'சதொச' நிறுவனக் கிளை ஒன்று சாவகச்சேரி டச்சு வீதியில் திறக்கப்பட்டுள்ளது. 'சதொச' நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.ஐ.எஸ்.ஏ.அஹாம் இதனைத் திறந்து வைத்தார். (இ)








சன்விழூ நிறுவனத்தால் மிருசுவில் பாரதி முன்பள்ளி மாணவர்கள், கொடிகாமம் மத்தி பாலர் பாடசாலை நிலைய மாணவர்கள், முகமாலை புதிய இளந்தென்றல் முன்பள்ளி மாணவர்கள் மற்றும் கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்கள் ஆகியோருக்குத் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன. (ஐ-21)



வட மாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸ் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உடற்பயிற்சி உபகரணங்களை வழங்கியுள்ளார்.

வடமாகாணசபையின் 2016 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை பிரதேச செயலர் எஸ்.சிவசிறியிடம் கையளித்தார். (ஐ-40)

# வடமாகாண கிரிக்கெட் விளையாட்டுத்துறையை விருத்தி செய்ய நடவடிக்கை!

## கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் திலங்க சுமதிபால தெரிவிப்பு



வவுனியா, ஜன.16

வட மாகாணத்தின் கிரிக்கெட் விளையாட்டுத் துறையை விருத்தி செய்ய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவரும், பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட கிரிக்கெட் சம்மேளனங்களுடன் நடைபெற்ற சந்திப்பு ஒன்றை திலங்க சுமதிபால வவுனியாவில் நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாணத்தில் திறமையான விளையாட்டு வீரர்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் தேசிய அணியில் இணையக் கூடிய அளவுக்கு இன்னும் வரவில்லை.


போதியளவிலான பயிற்சி இல்லாமையே அதற்குக் காரணமாகும். இவ்வாண்டு வட மாகாணத்தில் இருந்து இலங்கையின் 'ஏ' அணி, மற்றும் தேசிய அணி என்பவற்றில் விளையாட்டு வீரர்கள் பங்கு பற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காக நாம் வட மாகாணத்தின் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அவர்களுக்கான சிறந்த பயிற்சிகளையும் வழங்கவுள்ளோம். இதற்காக பயிற்சி மையம் ஒன்றையும் நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம்.

முதல்கட்டமாக வன்னியின் மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கிரிக்கெட் சம்மேளனங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

உங்களுடைய கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாகவும், நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கூறியுள்ளீர்கள். இது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்கள், கிரிக்கெட் வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-100)






இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டப் போட்டிகள் பாடசாலை முன்றிலில் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படம். (21)

# சர்வதேச போட்டிகளில் வீரர்களை ஈடுபடுத்த இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு

கொழும்பு, ஜன.16

சர்வதேச மட்டத்தில் இவ் ஆண்டில் நடைபெறவுள்ள கரப்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை வீரர்களை ஈடுபடுத்த இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் தயாராகியுள்ளது.

இதற்காக 28 பேரைக் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிலுள்ள வீரர்களுக்கு ஹெய்யந்தொடுவ பயிற்சி மத்திய நிலையத்தில் இரண்டு வாரகாலமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எஸ்.நாலக்க



தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் மியன்மாரில் நடைபெறவுள்ள 19 வயதிற்குட்பட்ட ஆசிய கரப்பந்தாட்ட வெற்றிக்கிண்ண போட்டியில் இலங்கை அணி கலந்து கொள்ளவுள்ளது.

மேலும், எதிர்வரும் மே மாதத்தில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள 23 வயதிற்குட்பட்ட ஆசிய கரப்பந்தாட்ட வெற்றிக் கிண்ண போட்டியிலும் இலங்கை அணி ஒன்று கலந்து கொள்ளவுள்ளது.

23 வயதிற்குட்பட்ட அமைப்புக்கான தெரிவு ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் இக்குழுவினருக்கு கொழும்பு, ரொறின்டனில் ஆரம்பப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மிகப் பெரிய தோல்வியாகக் கருதுகிறேன்!

## தென்னாபிரிக்க டெஸ்ட் குறித்து மத்தியூஸ்



கொழும்பு, ஜன.16

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தோல்வியை மிகப் பெரிய தோல்வியாக கருதுகிறேன் என்று இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இலங்கை கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்துள்ளது.

இதுகுறித்து அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தவை வருமாறு:-

என் கிரிக்கெட் வாழ்க்கையில் எவ்வளவோ தோல்விகளை நான் பார்த்துள்ளேன். ஆனால், அணியின் தலைவராக இதுதான் மிகப் பெரிய தோல்வியாக கருதுகிறேன்.

எந்தவொரு ஆடுகளத்தில் விளையாடும் நோக்கத்தோடு தான் நாங்கள் இலங்கையில் பயிற்சி எடுத்தோம் மற்றும் பவுன்சர் பந்துகளை எதிர்கொள்ளவும் சிறப்புப் பயிற்சி பெற்றோம்.

ஆனாலும், அதிக அனுபவம் இல்லாத எங்கள் வீரர்களால் இதை திறம்பட கையாள முடியவில்லை. எங்கள் அணியில் இருக்கும் வீரர்களில் 3 பேர் மட்டுமே இதுவரை தென்னாபிரிக்காவில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள் என்றும் கூறியுள்ளார்.





ஸ்ரீலங்கா கிரிக்கெட் பவுண்டேஷன் நிறுவனம் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான துடுப்பாட்ட உபகரணங்கள் மற்றும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான மைதான விரிப்புக்களை (காப்பெறுக்கள்) வழங்கியுள்ளது.

கிரிக்கெட் பவுண்டேஷன் முகாமையாளர் கல்லூரி நிர்வாகத்தினரிடம் விளையாட்டு உபகரணங்களைக் கையளிப்பதையும், விளையாட்டு உபகரணங்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையை வெள்ளை அடித்தது தென்னாபிரிக்கா!



ஜோகன்னஸ்பர்க், ஜன.16

ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற இலங்கை அணிக்கெதிரான கடைசி டெஸ்டில் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் மற்றும் 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 எனக் கைப்பற்றி இலங்கையை வெள்ளை அடித்துள்ளது.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்று தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 426 ஓட்டங்களைக் குவித்தது. அம்லா 134 ஓட்டங்களையும், டுமினி 155 ஓட்டங்களையும் சேர்த்தனர். இலங்கை அணி சார்பில் பிரதீப் மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் இலங்கை அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 80 ஓட்டங்களை எடுத்திருந்தது. மத்தியூஸ் 11 ஓட்டங்களுடனும், சந்திமல் 3 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று முன்தினம் 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய மத்தியூஸ் மேலும் 8 ஓட்டங்களை எடுத்து 19 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். சந்திமல் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இலங்கை அணி 45.4 ஓவர்களை மட்டுமே சந்தித்து 131 ஓட்டங்களில் சுருண்டது.

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பிளாண்டர், ரபாடா ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களும், பர்னெல் மற்றும் ஒலிவியர் தலா 2 விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

தென்னாபிரிக்காவை விட இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 295 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்ததால், பொலோ ஒன் ஆனது.

இதனால், இலங்கை அணி தொடர்ந்து 2 ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது.

தென்னாபிரிக்காவின் அதிவேக பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இலங்கை அணி 2 ஆவது இன்னிங்ஸில் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது.

இதனால் 42.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அந்த அணி 177 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் மற்றும் 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பர்னெல் 4 விக்கெட்டுகளும், ஒலிவர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 எனக் கைப்பற்றி இலங்கையை வெள்ளை அடித்துள்ளது.

முதல் இன்னிங்ஸில் 155 ஓட்டங்களைக் குவித்த டுமினி ஆட்ட நாயகன் விருதையும், அந்த அணியின் தொடக்க வீரர் டீன் எல்கர் தொடர் நாயகன் விருதையும் பெற்றனர்.

# மெஸ்ஸி மீது விமர்சனம்; பார்சிலோனா நடவழிக்கை!




மட்ரிட், ஜன.16

பார்சிலோனா அணியின் அதிகாரி ஒருவர் மெஸ்ஸி இல்லாவிட்டாலும் அணி சிறப்பாகச் செயற்படும் என்று கூறியதுடன் விமர்சனமும் செய்திருந்தார்.

இதனையடுத்து பார்சிலோனா அவரை பதவி நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஸ்பெயினின் முன்னணி உதைபந்து கிளப் அணியான பார்சிலோனாவில் ஆர்ஜென்டினா அணியின் தலைவர் மெஸ்ஸி தொடர்ந்து விளையாடி வருகிறார்.

கோபா டெல் ரெய் தொடரில் அத்லெடிக் பில்பயோ அணிக்கு எதிரான போட்டியில் பார்சிலோனா அணி 4-3 என வெற்றி பெற்றது.

இதற்கு 78 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி ப்ரீ கிக் மூலம் அடித்த கோல்தான் முக்கிய காரணமாக இருந்தது. அத்துடன் பார்சிலோனா காலிறுதிக்கும் முன்னேறியது.

ஆனால், பார்சிலோனா அணியின் அதிகாரியான பெரே கிரேடாகோஸ் மெஸ்ஸி ஆட்டம் குறித்து விமர்சனம் செய்திருந்தார். அவர், ''இந்த வெற்றி மெஸ்ஸி தன்னிச்சையால் வந்ததல்ல. இனிஸ்டா அல்லது நெய்மர் இல்லாமல் அவரால் சிறப்பாக செயற்பட முடியாது'' என்று கூறியிருந்தார்.

இதனால், பார்சிலோனா அணி கடும் அதிர்ச்சியடைந்தது. அத்துடன், மெஸ்ஸி குறித்த பெரே கிரேடாகோஸின் கருத்து அவரது தனிப்பட்டது என்று கூறியதுடன் அவர் விரைவில் பதவி நீக்கம் செய்யப்படுவார் என்று தெரிவித்துள்ளது.

# இறுதிப் போட்டியில் ரட்வான்ஸ்கா!

மெல்போர்ன், ஜன.16

ஏப்பியா சர்வதேச சிட்னி டென்னிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு போலந்து வீராங்கனை



அக்னியெஸ்கா ரட்வான்ஸ்கா தகுதி பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி ஒலிம்பிக் பார்க் டென்னிஸ் அரங்கில் இந்தப் போட்டி இடம் பெற்றது.

செக் குடியரசு வீராங்கனை பார்பரா ஸ்ட்ரைகோவாவுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது அரை இறுதிப் போட்டியில் 2 நேர் செட்களில் ரட்வான்ஸ்கா வெற்றிபெற்றுள்ளார்.

முதலாவது செட்டில் 6 - 1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற ரட்வான்ஸ்கா, இரண்டாவது செட்டிலும் 6 - 2 என இலகுவாக வெற்றி பெற்றுள்ளார்.

# 13 இற்கு அப்பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பால நேற்று மகாநாயக்க தேரரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கும் போது இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

13ஆவது அரசமைப்புத்திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களை ஏற்படுத்துவது அல்லது வழங்குவது தொடர்பில் கதைப்பதற்கோ அதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கோ தற்போதுள்ள சூழல் பொருத்தமற்றது என்பதே எமது எண்ணமாகும். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் பேசுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது தயாராக இல்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒருவர் தற்போது இருக்கின்றார். அந்த ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, ஜனாதிபதியொருவர் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற கருத்திலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது. சிங்கள – பௌத்தம் என்ற யோசனை, சிங்கள பௌத்தர்களுக்கான முன்னுரிமை, புத்த தருமத்தை வளர்த்தல், ஊக்குவித்தல் தொடர்பில் தற்போதுள்ள அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள புத்த தருமம் தொடர்பான, பௌத்தத்திற்கான முன்னுரிமை தொடர்பான எந்தவொரு சொற்களிலும் மாற்றம் செய்யப்படக்கூடாது என்ற கருத்திலேயே நாம் உள்ளோம்.

நாட்டில் 30 வருடங்களுக்கும் அதிக காலம் யுத்தம் நடைபெற்றது. யுத்தம் ஏற்படுவதற்குக் காரணமொன்று இருந்திருக்க வேண்டும். தமக்கு உயிர் வேண்டாம் என மரணிக்கத் துணிந்த ஒரு பிரிவினர் நாட்டில் இருந்தனர்.

மக்களின் விருப்பங்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான காரணங்கள் இருந்தமையால்தான் அவ்வாறு செய்வதைத் திணிப்பதற்கு பயங்கரவாதத் தலைவர்களால் முடிந்தது. மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு நாங்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

நாங்கள் எமது மதம் மற்றும் இனத்தின் மீது அன்பு கொண்டிருந்தால் நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படாதவாறு இந்த நாட்டில்நாம்நினைக்கின்றவாறு சிறு சிறு பிரிவினருக்கு, குழுக்களுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்கியிருக்கலாம்.

அவர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நாம் முன்னிற்க வேண்டும். அது மொனறாகலையாக இருக்கலாம், அம்பாறையாக இருக்கலாம், யாழ்ப்பாணமாக இருக்கலாம், திருகோணமலையாக இருக்கலாம். அனைத்து மாகாணங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். – என்றார். (ஓ)

## அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆகியவற்றால் அரசுக்கு ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகைக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கணக்காய்வாளர் நாயகம் கண்டுபிடித்து அறிவித்திருக்கின்றார்.

இந்த அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்படாமை, மேற்படி அரிசி இன்னும் தனியாரின் கொள்கலன் சேமிப்பகங்களில் தங்கிக் கிடப்பதால் ஏற்படும் கட்டணச் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கிடும்போது இந்த நஷ்டம் மேலும் அதிகரிக்கும் என்றும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் –

மேலும் அரிசியை இறக்குமதி செய்வதில்அரசு முனைப்புக் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டி நேரிடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேசமயம், வறட்சியால் மக்களின் பாவனைக்கான தண்ணீர்த் தேவையும் பதினைந்து வீதத்தால் அதிகரித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மக்களை மின்சாரத்தையும், தண்ணீரையும் சிக்கனமாகப் பாவிக்கும்படி அரசு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை நீர்ப்பாசனத் திணைக்களம் பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து பயிர்ச் செய்கைக்கு நீரைத் திறந்து விடும் நடவடிக்கையை ஏற்கனவே மட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வறட்சி நெருக்கடியால் அடுத்த சில வாரங்களில் சமூகக் குழப்பங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என ஊடக மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"ஏற்கனவே நீர்ப்பாசனத் தண்ணீரை மட்டுப்படுத்தியமைக்கு எதிராக விவசாயிகள் கொதித்து எழுந்துள்ளனர். நீர்த்தேக்க அணைகளை உடைத்து எஞ்சியுள்ள தண்ணீரைத் தாங்களே விவசாயத்துக்கு திறந்து விடப்போகின்றோம் என சில பகுதிகளில் விவசாயிகள் எச்சரித்து உள்ளனர். நீர்ப்பாசன வழிகள் தடைப்பட்டிருப்பதால் சிறு நீர்த்தேக்கங்கள் மற்றும் கிணறுகள் தொடர்பிலும் புதிய முரண்பாடுகள் எழுந்துள்ளன.

"நீர்த்தேக்கங்கள் மூலமான நீர் மின்சார உற்பத்தி தடைப்படுமானால் நாடு அனல் மின்சாரத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டி நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பருவமழை ஏப்ரலில் கிடைக்கும் வரை பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நிலைமை மோசமாகத்தான் இருக்கும்" – என்றார் அமைச்சர் பரணவிதான. (உ)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆஸ்பத்திரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

கண்டி பொது வைத்தியசாலையில் இந்த 'இன்புளுவென்ஸா' காய்ச்சலினால் இரு நோயாளிகள் உயிரிழந்தமையை அடுத்து சுகாதார சேவைபதில் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் ஜெயசுந்தர பண்டார அங்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட் டார்.

கண்டி ஆஸ்பத்திரியில் உள்ள பன்னிரண்டு நோயாளர்கள் இந்த வைரஸைக் கொண்டிருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுவதால், அந்தப் பிரதேசத்தில் இந்த வைரஸ் பரவலாம் என்ற பீதி இருப்பதாக அவர் சென்னார்.

இந்த வைரஸ் பரவாமல் கட்டுப்படுத்துவதை உறுதி செய்வதற்காக நாட்டின் சகல வைத்தியசாலைகளும் உஷார்ப்படுத்தப் பட்டிருக்கின்றன என்றும் அவர் சென்னார்.

இந்த வைரஸ் பறவைகள் அல்லது பன்றிக்குத் தொற்றினால் அவற்றின் மூலம் அது வேகமாகப் பரவுமென்றும் எச்சரிக்கப்படுகின்றது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வில் அவரது வீட்டிற்குச் சென்ற பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது வீட்டிற்குச் சென்றவர்கள் தம்மைப் பொலிஸார் என அறிமுகப்படுத்தியுள்ளனர் எனவும் வவுனியாவில் இருந்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

தவவேந்தன் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக உறவினர்களால் கிளிநொச்சி பிரஜைகள்குழுவுக்கும்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சியில் கா.குபேந்திரன் என்ற மற்றொரு முன்னாள் போராளியும், திருகோணமலையில்மதன்ராஜ் என்ற முன்னாள் போராளியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மற்றொரு செய்தி தெரிவித்தது. எனினும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (உ)

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வாறு தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டிஆட்சிஒன்றைஅமைப்பது என்ற மக்களின் ஆணையை நாம் பெற்றிருக்கிறோம். இது தொடர்பாக எப்படி ஒரு சிறந்த உடன்பாட்டுக்கு வரலாம் என்று அரசுடன்நாம்பேசிவருகிறோம்.

விரிவான அதிகாரப் பகிர்வுக்கான பொறிமுறையாக 13ஆவது திருத்தச்சட்டத்தை நாம் ஏற்கமாட்டோம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியுள்ளார்.

## எட்டுச்செலவுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனத் தெரியவருகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நேற்று மாலை ஏழாலை வடக்கு பிரதேசத்திற்குச் சென்ற கட்டுவனைச்சேர்ந்தநான்கு இளைஞர்கள் அங்கு வீதியில் நின்ற ஒருவர் மீது தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், ஏழாலை வடக்கில் இடம்பெற்ற மரண வீடொன்றின் எட்டுச் செலவுக் கிரியைகள் செய்வதற்காக நேற்று மாலை உசத்தியோடை மயானத்திற்குச் சென்றவர்களை கட்டுவனில் வைத்து வழிமறித்த அதே இளைஞர்கோஷ்டியினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில், நா.சுசீபன் (வயது 21), சி.சந்திரசேகரம் (வயது 54), ச.மயூரன் (வயது38), செ.திருமகள் (வயது 17), க.இளங்கோ (வயது 29), இ.தனுசன் (வயது 24), இ.மதியழகன் (வயது 42) ஆகியோரே காயமடைந்தனர். கிராம சேவையாளரான அ.அகிலன் (வயது 30) என்பவர் மீதும் தாக்குதல் இடம்பெற்றது. அவர் உடம்பில் உட்காயமடைந்தார் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழை மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும் தெல்லிப்பழைப்பொலிஸார்விரைவாகச் சென்ற போதிலும், பிரதேசத்திற்கு பொறுப்பான சுன்னாகம் பொலிஸார் காலதாமதமாகவே அங்குவந்துசேர்ந்தனர்எனவும் பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

தாக்குதலாளிகள் அனைவரையும் பொலிஸாருக்கு இனம் காட்டப்பட்டுள்ள போதிலும் பொலிஸார் நேற்றிரவு வரை அவர்களைக் கைது செய்திருக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் தைத்திருநாள் விளையாட்டுக்கள்



இளவாலை, ஜன.16

தமிழர் திருநாள் தைத்திருநாள் தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் வின்சென்ட் ராஜேந்திரன் கலந்துகொண்டார்.

இங்கு இடம்பெற்றவிளையாட்டுக்களில் வெற்றிபெற்றவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பரிசில்களை வழங்கிவைத்தார். (ம–21)

# கடற்றொழிலாளர்களின் ஏற்பாட்டில் கச்சாயில் நேற்று படகுப் பொங்கல்



தமிழர்களின் பொங்கல் பண்டிகையின் தொடர்ச்சியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கச்சாயில் படகுப் பொங்கல் இடம்பெற்றது. கச்சாய் இறங்குதுறையில் இந்தப் பொங்கல் இடம்பெற்றது.

படகை நம்பிக் கடல் தொழிலுக்கு செல்லும் தொழிலாளர்கள் தமது படகுகளைக் கரைக்கு ஏற்றி மலர்மாலைகள் அணிவித்து அலங்கரித்தனர்.

படகுகளுக்கு முன்பாக பொங்கல் பொங்கி படையல் செய்து வழிபட்டனர். இந்தப் படகுப் பொங்கல் நிகழ்வில் 70 வரையான படகுகளை அவதானிக்க முடிந்தது.

இந்தப் படகுப் பொங்கல் நிகழ்வில் நூற்றுக்கணக்கணக்கான கடற்றொழிலாளர் குடும்பங்கள் பங்குபற்றின. (ம–21)

# மாங்குளம் மகா வித்தியாலயத்தில் பொங்கல் தினத்தன்று பல நிகழ்வுகள்

### பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றன



முல்லைத்தீவு, மாங்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்த பொங்கல் விழா நேற்று முன்தினம் வித்தியாலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

காலை பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்று அதனை தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், கிளித்தட்டு மற்றும் பல போட்டிகள் இடம்பெற்றன. மாலை பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விசேட நிகழ்வாக ஈழத்துப் பாடகர் சாந்தனின் புதல்வன் கோகுலனின் இசை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாங்குளம் மின்னொளி விளையாட்டுக் கழகத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபா வீதம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் மற்றும் துணுக்காய் கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கௌரி புத்திரி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம–81)

காலைக்கதிர்
Kalaikkathir

# கண்ணிவெடிகள் பட்டயத்தில் இலங்கை ஒப்பமிட எதிர்ப்பு

கொழும்பு, ஜன.16

நிலக்கண்ணிவெடி தொடர்பான சர்வதேசப் பட்டயத்தில் அரசு கைச்சாத்திடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு ஆகியன கூட்டாக இணைந்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனையின்படி இந்தப் பட்டய விதிகளை அமுல்படுத்துவதற்கு 2016ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. எனினும் இந்தப் பிரகடனத்தை இலங்கையில் தற்போதைக்கு அமுல்படுத்தக் கூடாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது

இந்தப் பட்டயத்தில் கூறப்பட்டுள்ள விதிகளைத் தற்போதைக்கு அமுல்படுத்த முடியாது. இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கு கண்ணி வெடிகள் மிகவும் அவசியமானவை. இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கு அதி நவீன சாதனங்கள், கருவிகளைக் கொள்வனவு செய்து அவற்றை உரிய முறையில் பயன்படுத்தியதன் பின்னர் இந்த விதிகளை அமுல்படுத்த முடியும். எனவே அவற்றை அமுல்படுத்துவதற்கு சில ஆண்டுகள் கால அவகாசம் தேவை என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ஒ)

# அம்பாந்தோட்டை அபிவிருத்தி உடன்படிக்கை நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஜன.16

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பான இருபக்க உடன்படிக்கையை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, துறைமுக ஒப்பந்தம் தொடர்பான சகல விடயங்களும் நாடாளுமன்றுக்கும் மக்களுக்கும் அறிவிக்கப்படும் என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உடன்படிக்கை தொடர்பில் எதிர்க்கட்சி விவாதம் ஒன்றை வேண்டினால், தேவையான அளவு காலத்தை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசு சீனாவுடன் இணைந்து அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தி திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யாழ்.நகரில் நேற்று பட்டிப்பொங்கல்

யாழ்.நகர் சத்துரத்துச் சந்தி ஞான வைர்வர் ஆலயத்தில் நேற்று பட்டிப் பொங்கல் நிகழ்வும் கோமாதா பவனியும் இடம்பெற்றன. யாழ்.நகரின் பல இடங்களிலும் இருந்து கொண்டுவரப்பட்ட கோமாதாக்கள் இந்த பவனியில் பங்குபற்றின. பிரமுகர்களும் பவனியில் பங்குபற்றினர். (ம)










கனடா மார்க்கம் சிவிக் மையத்தில் நேற்று ஆரம்பமாகிய முல்லைத்தீவுக்கும் கனடா பிரம்டன் மாநகர சபைக்கும் இடையிலான 'சகோதர இரட்டை நகர உடன்படிக்கை' கைச்சாத்திடும் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பங்கேற்றிருந்த போது...

# நாடுகள் சிலவற்றின் நிதியைக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸை உடைக்கச் சதியாம்!

கொழும்பு ஜன.16

சர்வதேச நாடுகள் சிலவற்றின் பணத்தைத் துணையாகக் கொண்டு முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை இல்லாதொழிப்பதற்கு சிலர் சதித்திட்டம் தீட்டிச் செயற்பட்டு வருகின்றனர் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தலைவர் அஷ்ரப்பின் இலட்சியக் கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை பேரினவாத மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஆட வைப்பதற்கு முற்பட்டுத் தோற்றுப்போன நிலையில் சிலர் போலியான ஆவணங்களை முன்வைத்து கட்சிக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கட்சிக்கு உள்ளே இருக்கும் சிலர் இவ்வாறான நயவஞ்சகத்தனமான, கீழ்த்தரமான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமை ஏமாற்றமளிக்கின்றது. அவர்களின் முகத்திரை கிழிக்கப்படும் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே அவர்களுக்கு உரிய பதிலை வழங்குவார்கள்.

குரோத நோக்கில் வீண்பழி சுமத்துபவர்களின் பொய்யை நம்பி ஏமாறுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராளிகள் ஒரு போதும் தயாரில்லை. இலட்சியத்துடனும் தூய சிந்தனையுடனும் அணி திரண்டுள்ளவர்களே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள். அவர்களை அடிவருடிகளாக நினைத்துச் சிலர் தமது குரோத அரசியலை அரங்கேற்றுவார்களேயானால் அதன் இழப்பை அவர்களே சந்திப்பார்கள்.

முஸ்லிம்களின் தனித்துவக் குரலாகவும் அவர்களின் பிரச்சினைகளில் முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதியாகவும் அங்கீகாரம் பெற்றுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமையும் எவரதும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகாமையே இன்றைய விமர்சனங்களுக்குக் காரணம்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாருடைய நிகழ்ச்சி நிரல்களுக்கும் இணங்க ஒரு போதும் செயற்படாது. முஸ்லிம்களின் எதிர்கால நலனையும் இருப்பையும் மையப்படுத்தி மாத்திரமே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் சிறுபான்மைச் சமூகங்கள் ஒற்றுமைப்படுவதன் மூலம் மாத்திரமே இரு சமூகங்களுக்கும் நிரந்தரமான அரசியல் தீர்வு கிட்டும் என்பதில் நம்பிக்கை கொண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது. அதனை விரும்பாத சிலர் இரு சமூகங்களையும் குழப்பிவருகின்றனர். அதனை உணர்ந்து இரு சமூகங்களும் தெளிவுடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

# தற்கால அரசியல் தொடர்பாக வவுனியா மக்களுடன் சந்திப்பு

வவுனியா, ஜன.16

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஆர்.இந்திரராசா, எம்.தியாகராசா ஆகியோர் வவுனியா வடக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வவுனியா – நயினாமடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வறட்சி மற்றும் நீர்ப்பிரச்சினை, விவசாயத்திற்கான நஷ்டஈடு தொடர்பாகவும் இதன்போது பொது மக்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ம)

# வெளிநாட்டுத் தபால் பொதிகள் அனைத்தும் இனி சோதனை

கொழும்பு, ஜன.16

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்படும் அனைத்துத் தபால் பொதிகளும் பரிசோதனை செய்யப்படும் என தபால்மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்திய தபால் பரிமாற்றகத்தில் காணப்பட்ட பொதி ஒன்றிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதையடுத்தே மத்திய தபால் பரிமாற்றகத்திற்கு வரும் அனைத்துப் பொதிகளையும் சோதனைக்கு உட்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் இதற்கென மத்திய தபால் பரிமாற்றகத்தில் இரண்டு புதிய ஸ்கான் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தபால்மா அதிபர் கூறியுள்ளார். (ஒ)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள் எடுத்து வரும் நகர்வுகள் குறித்தும் அவரிடம் கேட்கப்பட்டது.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலுக்குள் சம்பந்தப்பட்ட நான் விரும்பவில்லை. இப்போது அதிக சத்தமிடுபவர்கள் (முன்னர்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இருந்தவர்கள் தான். வெற்றிக்கு எந்த வகையிலும் பங்களித்தவர்கள் அல்லர். (முன்னாள்) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போவதற்கு அவர்களுக்குத் துணிச்சல் இருக்கவில்லை." – என்றார். சம்பந்தன்.

வடக்கு – கிழக்கு இணைப்பு நிராகரிக்கப்படவேண்டும் என்ற சு.கவின் வற்புறுத்தல் குறித்துக் கேட்டபோது –

"இது விடயம் அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழுவில் பல தடவைகள் பேசப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் அறிக்கையை அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அனுப்புவார்கள். அவர்களின் (அரசமைப்புக் கவுன்ஸிலின்) முடிவுக்கு நாங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்." – என்றார் சம்பந்தன்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது வடக்கு – கிழக்கு இணைப்பையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்நிறுத்தியதே என்று கேட்கப்பட்டதற்கு –

"அது நன்கு தெரிந்தது தான். எங்களின் எந்த நிலைப்பாட்டையும் நாம் கைவிட்டுவிடவில்லை. தமிழ் மக்கள் மற்றும் தமிழ் பேசும் மக்கள் உட்பட எல்லா மக்களினாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஓர் அரசமைப்புக் கட்டமைப்பை உருவாக்க நாம் முயற்சிப்போம்." – என்று பதிலளித்தார் சம்பந்தன். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல 30 இந்துக் கல்லாரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.